உ

சிவ சிவ

செந்திலாண்டவன் துணை

சிவஞானத் திருமுறை

★

ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி

சாமிநாத சுவாமிகள் அவர்கள்

ன்னிரண்டாம் ஆண்டு நினைவு மலர்

14—3—1956

★

ஸ்ரீ காசி மடம் 1956 திருப்பனந்தாள்

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து வெளியீடுகள்

		ரூ.	அ.
1	விநாயகர் திருமுறை	0	1
2	ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத் திரட்டு டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் குறிப்புரையுடன்	6	0
3	சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தம்... ...	3	0
4	திருஞானசம்பந்தர் தேவாரம்	2	8
5	திருநாவுக்கரசர் தேவாரம்	1	0
6	சுந்தரர் தேவாரம்	1	0
7	திருவாசகம்	0	6
8	திருக்கோவையார்—பேராசிரியர் உரை ...	2	0
9	ஒன்பதாம் திருமுறை—திருவிசைப்பா திருப்பல்லாண்டு	0	9
10	திருமந்திரம்—செய்யுள்	1	8
11	பதினோராந் திருமுறை	1	4
12	அம்மையார்-அற்புதத் திருவந்தாதி (அச்சில்)		
13	திருக்கைலாய ஞானவுலா உரையுடன் ...	0	8
14	பெரியபுராணம்—செய்யுள்	2	8
15	பெரியபுராணம்—வசனம்	2	0
16	அகத்தியர் தேவாரத் திரட்டு—குறிப்புரை ...	0	6
17	திருவிளையாடற்புராணம்-செய்யுள்	3	0
18	திருவிளையாடற்புராணம்—வசனம்	2	4
19	தாயுமான சுவாமிகள் பாடல்	1	4
20	கந்தபுராணச் சுருக்கம்—செய்யுள்	1	12
21	கந்தபுராணம்—முதல் மூன்று காண்டங்கள் ஆராய்ச்சிக் குறிப்புடன்	2	12
22	ஷை யுத்த காண்டம், தேவ காண்டம் ...	2	0
23	ஷை தக்ஷ காண்டம் குறிப்புரை	1	8
24	கந்தபுராணம்—வசனம்	2	8
25	கந்தர் அலங்காரம் குறிப்புரை	0	4
26	கந்தர் அநுபூதி ஷை	0	2
27	கந்தர் கலிவெண்பா—ஆங்கிலமும் ஹிந்தியும் கூடியது	0	6

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து இலவச வெளியீடு

உ

சிவ சிவ

செந்திலாண்டவன் துணை

சிவஞானத் திருமுறை

★

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்துத் தலைவர்

ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித்தம்பிரான் சுவாமிகள்

அவர்கள் திருவுள்ளப்பாங்கின்படி

★

ஸ்ரீ காசிமடத்து இளவரசு

ஸ்ரீமத் மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள்

அவர்களால் வெளியிடப்பெற்றது

★

மன்மத ஆண்டு பங்குனித் திங்கள் முதல் நாள்

1956

ஸ்ரீ காசிமடம் :: திருப்பனந்தாள்

சிவசிவ

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்துத் தலைவர்

ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி
அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள்

அவர்கள் நிறுவிய தருமங்கள்

எண்.	தரும விவரம்	மூலதனம் ரூபாய்
1.	திருமுறை வளர்ச்சிக்கு ஆக 24 தருமங்கள்	3,29,000
2.	கல்வி அபிவிருத்திக்கு ஆக 45 ,,	5,77,700
3.	சைவசித்தாந்தம் பரப்ப 7 ,,	1,56,000
4.	அன்னதானம் செய்ய 82 ,,	19,33,500
5.	வைத்தியம் செய்ய 5 ,,	1,22,500
6.	பொது தருமங்கள் - ஸ்நான கட்டம், அகதி நன்கொடை, தண்ணீர்ப் பந்தல், ஒளிவளர் விளக்குகள், பசுப் பரிசு, கல்லெழுத்து முதலியன 48 தருமங்கள்	4, 86,245
	ஆகத் தருமங்கள் 211-க்கு	36,04,945

உ
சிவ சிவ
செந்திலாண்டவன் துணை

முன்னுரை

அஞ்செழுத்தின் உண்மை அதுவான அப்பொருளை
நெஞ்சழுத்தி ஒன்ருகி நிற்குநாள் எந்நாளோ?
—தாயுமானர்

உயிர்க்கெலாம் இருப்பது ஊனமாகிய இளைப்பு. இவ் இளைப்பு நீங்க உதவியாக இருப்பது ஞானம். ஞானம் **சிவனடி யைச்** சிந்திப்பதால் பெருகுவது; **சிவனருளைச்** சிந்திப்பதால் பெருகுவது எனினும் அமையும். சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானத்தை அடையச் சாதனங்கள் வேண்டும் சாதனங்களாக அமைவனவே வேத சிவாகமங்கள். இவை சிவ பரம்பொருள் அருள்கொண்டு அருளியவையாம். வேதத்தின் ஞானபாதப் பொருள்கள் தோத்திரவடிவில் சமயகுரவர்களால் பாடப்பெற்றுள்ளன. தேவாரம் வேதசாரம் என்பது ஆன் ருேர் வாக்கு. சிவாகமத்தின் ஞானப் பொருள்கள் சந்தான குரவர்களால் சாத்திரமாகச் சமைத்துத் தரப்பெற்றுள்ளன

தன்னைப்பற்றியும் தலைவனைப்பற்றியும் தெரியவேண்டிய ஞானத்தை விளக்குவது **சாத்திரம்**. சாத்திரத்தால் துணியப் பெற்ற தலைவனை நன்கறிந்து அவன்பால் பக்தியைப் பெருக்கு வது **தோத்திரம்**. சாத்திரம் இம்மையினும் மறுமையினும் இன் புற்றிருப்பதற்கு வழிவகுக்கிறது. தோத்திரம் அவ்வின்பத்தை இடையீடின்றி அருந்தித் துய்ப்பதற்கு வகை செய்கிறது.

நம் சிவநெறியில் சிறந்த சாத்திரங்கள் மெய்கண்ட சாத் திரங்கள்; தோத்திரங்கள் மூவர் முதலிகளது தேவாரம் முதலியன. சாத்திர தோத்திரமாகிய இவ்விரு நூற்பகுதி களிலும் மெய்ப்பொருளாய் இலங்குவது **ஸ்ரீ பஞ்சாக்கரம்**. இது தூல சூக்கும அதிசூக்குமமென முத்திறப்படும் தூலபஞ்சாக் கரம் நகரத்தை முதலாக உடையது; திருவாசகத்தின் தொடக் கமும் இதுவே. சூக்கும பஞ்சாக்கரம் சிகரத்தை முதலாக வுடையது; 'சிவாயநம' என்று சிந்தித்திருப்போர்க்கு அபாய மொருநாளும் இல்லை' என்பது ஔவை வாக்கு. அதிசூக்கும

பஞ்சாக்கரம் நகர மகரங்கள் இரண்டுமின்றி மற்ற மூன்று எழுத்து முன்னும் பின்னும் மாறுதலாய் ஐந்தெழுத்தாவது; இது சிகரத்தை முதலாகவுடையது; இது காரண பஞ்சாக்கரம் முத்தி பஞ்சாக்கரம் எனவும் பெயர் பெறும். பாசத்தை நீக்கி ஞானக்கண்ணால் சிவத்தை நாடுவது முத்தி பஞ்சாக்கரமாகும். இவ்வைந்தெழுத்தின் அமைதியினைக் கூறும் சிவஞானப் பாடல்களை மட்டும் சாத்திர தோத்திரங்களிலிருந்து தொகுத்து **"சிவஞானத் திருமுறை"** என்ற பெயருடன் திருப்பனந்தாள் காசித் திருமடத்து ஞானப் பெருந்தலைவர் **ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள்** அவர்கள் திருவுளப்பாங்கின் படி, **ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சாமிநாத சுவாமிகள் அவர்களின் 12-வது ஆண்டு நினைவுநாள் மலராக** வெளிவருகின்றது.

இவ்வெளியீட்டில் சாத்திர தோத்திரங்களினின்று தொகுக்கப்பெற்ற பாடல்களுக்குச் சிறு குறிப்பும் தரப்பெற்றுள்ளது; சோளிங்கபுரம் சித்தாந்த சரபம், **ஸ்ரீசிவ அருணசிவ யோகியவர்கள்** இயற்றிய **"ஸ்ரீ பஞ்சாக்கர விளக்கம்"** என்ற கட்டுரையும் சேர்க்கப்பெற்றுள்ளது; **ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சுவாமிகள்** அவர்கள் தமிழ் நலங் கருதியும், சைவசமய வளர்ச்சி பற்றியும், பிற பொதுநலப் பணிகளுக்கும் அவ்வப்பொழுது அருள்புரிந்து வரும் பேரறக் கட்டளைகளின் தொகுப்பும் முன்னர் இணைக்கப் பெற்றுள்ளது.

இவ்வெளியீடு நன்கு அமையுமாறு உறுதுணை புரிந்த திருச்சி வித்துவான் **திரு. தி. பட்டுச்சாமி ஓதுவார்** அவர்களுக்கும் ஏனைய அன்பர்களுக்கும் செந்திலாண்டவன் திருவருள் நின்று நிலவுவதாக.

இச்சீரிய சிவஞானத் திருமுறைத் தொகுப்புப் பணியினை அடியேற்கருளிய **ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களின்** திவ்ய திருவடிக் கமலங்களை என்றும் அடியவன் சிரத்திற்கணியெனக் கொண்டு வாழ்த்தி வழிபடுகின்றேன்.

"சாத்திரமும் தோத்திரமும் ஆனான் கண்டாய்"—அப்பர்.

இங்ஙனம்,
மகாலிங்கத் தம்பிரான்
இளவரசு

ஸ்ரீகாசி மடம்
திருப்பனந்தாள்
14—3—'56

உ
சிவ சிவ
செந்திலாண்டவன் துணை
திருச்சிற்றம்பலம்

சிவஞானத் திருமுறை

கணபதி துதி

கரியின் மாமுக முடைய
கணபதி தாதைபல் பூதம்
திரிய இல்பலிக்(கு) ஏகும்
செழுஞ்சுடர் சேர்தரு மூதூர்
சரியின் முன்கைநன் மாதர்
சதிபட மாநட மாடி
உரிய நாமங்கள் ஏத்தும்
ஒலிபுனல் காழிநன் னகரே. 1

—சம்பந்தர் தேவாரம்

திருஞானசம்பந்த சுவாமிகள்

தேவாரம்

1. திருவீழிமிழலை

பண் – காந்தார பஞ்சமம் *[3-ஆம் திருமுறை]*

திருச்சிற்றம்பலம்

திக்கமர் நான்முகன் மாலண்ட மண்டலந் தேடிட
மிக்கமர் தீத்திர ளாயவர் வீழிமி ழலையார்
சொக்கம தாடியும் பாடியும் பாரிடஞ் சூழ்தரும்
நக்கர்தம் நாமந **மச்சிவா ய**வ்வென்பார் நல்லரே. 9

திருச்சிற்றம்பலம்

---

1. கரி - யானை. சரி - வளை. காழி - சீகாழி.

9. திக்கு - திசை. மால் - திருமால். அண்டம் - ஆகாயம். மண்டலம் - பூமி. தீத்திரள் - அக்கினிப் பிழம்பு. சொக்கு - அழகு. பாரிடம் - பூதகணங்கள். நக்கர் - சிவபெருமான்.

2. பொது

பஞ்சாக்கரத் திருப்பதிகம் *

பண் – காந்தார பஞ்சமம் [3-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

துஞ்சலுந் துஞ்சலி லாத போழ்தினும்
நெஞ்சக நைந்து நினைமின் நாடொறும்
வஞ்சக மற்றடி வாழ்த்த வந்தகூற்(று)
அஞ்சவு தைத்தன அஞ்செ ழுத்துமே. 1

மந்திர நான்மறை யாகி வானவர்
சிந்தையுள் நின்றவர் தம்மை ஆள்வன
செந்தழல் ஓம்பிய செம்மை வேதியர்க்(கு)
அந்தியுள் மந்திரம் அஞ்செ ழுத்துமே. 2

ஊனிலு யிர்ப்பை ஒடுக்கி யொண்சுடர்
ஞானவி ளக்கினை ஏற்றி நன்புலத்
தேனைவ ழிதிறந் தேத்து வார்க்கிடர்
ஆனகெ டுப்பன அஞ்செ ழுத்துமே. 3

நல்லவர் தீயர் எனாது நச்சினர்
செல்லல்கெ டச்சிவ முத்தி காட்டுவ

---

* இப்பதிகம் சீகாழியில் தமக்கு உபநயனச் சடங்கு நடந்த போது அந்தணர்கள் யாவர்க்கும் திருவைந்தெழுத்தின் உண்மையைக் கூறியது.

1. துஞ்சல் - தூக்கம்; இங்கு சாக்கிரம், சொப்பனம் முதலிய அவத்தைகள். நெஞ்சகம் நைந்து - மனங்கசிந்து. கூற்று - இயமன்.

2. மந்திர நான்மறை - மந்திரங்கள் நிறைந்த வேதம், அவர் தம்மை - அவ்வானவர்களை. செந்தழல் - சிவாக்கினி; வைதிகாக்கினியுமாம். செம்மை வேதியர் - சிவதீட்சை பெற்ற அந்தணர்; மகாசைவர். அந்தி - மாலைக்காலம்.

3. ஊன் - உடல். உயிர்ப்பு - பிராணவாயு. ஏனைவழி - இங்குச் சுழுமுனை.

கொல்லந மன்றமர் கொண்டு போமிடத்(து)
அல்லல்கெ டுப்பன அஞ்செ ழுத்துமே. 4

கொங்கலர் வன்மதன் வாளி யைந்தகத்
தங்குள பூதமும் அஞ்ச வைம்பொழில்
தங்கர வின்பட மஞ்சுந் தம்முடை
அங்கையி லைவிரல் அஞ்செ ழுத்துமே. 5

தும்மல் இருமல் தொடர்ந்த போழ்தினும்
வெம்மை நரகம் விளைந்த போழ்தினும்
இம்மை வினையடர்த் தெய்தும் போழ்தினும்
அம்மையி னுந்துணை அஞ்செ ழுத்துமே. 6

வீடுபி றப்பை யறுத்து மெச்சினர்
பீடைகெ டுப்பன பின்னை நாடொறும்
மாடுகொ டுப்பன மன்னு மாநடம்
ஆடியு கப்பன அஞ்செ ழுத்துமே. 7

வண்டம ரோதி மடந்தை பேணின
பண்டையி ராவணன் பாடி யுய்ந்தன
தொண்டர்கள் கொண்டு துதித்த பின்னவர்க்(கு)
அண்டம ளிப்பன அஞ்செ ழுத்துமே. 8

கார்வணன் நான்முகன் காணு தற்கொணாச்
சீர்வணச் சேவடி செவ்வி நாடொறும்

---

4. நச்சினர் - விரும்பினவர். செல்லல் - துன்பம். சிவமுத்தி - சிவபதம். அல்லல் - துன்பம்.

5. கொங்கு - தேன்; வாசனையுமாம். வன்மதன் - வலிமை பொருந்திய மன்மதன். வாளி - பாணம். பூதம் - அகப்பூதம்.

6. வெம்மை - கொடிய. விளைந்த - நேர்ந்த. இம்மை - இப்பிறவி. வினை - ஊழ்வினை. அடர்த்து - பொருந்தி. அம்மை - மறுமை.

7. பிறப்பை அறுத்து வீடு மெச்சினர் எனக் கூட்டுக. மெச்சினர் - விரும்பினவர். மாடு - செல்வம். மாநடம் - அஞ்செழுத்து வடிவம் என்க.

8. வண்டு அமர் ஓதி மடந்தை - உமாதேவி. ஓதி - கூந்தல். பேணின - விரும்பியவை. பாடி - இசையமைத்துப் பாடி. அவர்க்கு - அத்தொண்டர்க்கு. அண்டம் - சிவலோகம்.

பேர்வணம் பேசிப் பிதற்றும் பித்தர்கட்(கு)
ஆர்வண மாவன அஞ்செ ழுத்துமே. 9

புத்தர்ச மண்கழுக் கையர் பொய்கொளாச்
சித்தத் தவர்கள் தெளிந்து தேறின
வித்தக நீறணி வார்வி னைப்பகைக்(கு)
அத்திர மாவன அஞ்செ ழுத்துமே*. 10

நற்றமிழ் ஞானசம் பந்தன் நான்மறை
கற்றவன் காழியர் மன்னன் உன்னிய
அற்றமில் மாலையீ ரைந்தும் அஞ்செழுத்(து)
உற்றன வல்லவர் உம்ப ராவரே. 11

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாயத் திருப்பதிகம் †

பண் – கௌசிகம் [3-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது

---

9. கார்வணன் - திருமால். செவ்வி - அழகை. பேர்வணம் - பெயர்வரிசை. பிதற்றுதல் - சொல்லுதல். பித்தர் - சிவஞானிகள். ஆர்வணம் - அநுபவிக்கும் தன்மை.

10. சமண் - சமண சமயம். கழுக்கையர் - கழுவைக் கையில் ஏந்தியவர்; சமணர். வித்தகம் - மேன்மை. வினை - ஊழ்வினை. அத்திரம் - அம்பு.

* இப் பாடலைத் திருஞானசம்பந்தரின் நலம்மாளுகிய சம்பந்த சரணாலயர் ஓதிப் போதிமங்கையில் புத்தநந்தியின்மேல் இடிவிழச் செய்தார்.

11. மன்னன் - தலைவன். உன்னிய - நினைத்துக் கூறிய. அற்றம் இல் - குற்றம் இல்லாத. உம்பர் - தேவர்.

† இப்பதிகம் திருநல்லூர்ப் பெருமணத்தில் (ஆச்சாபுரத்தில்) திருமணகாலத்தில் சிற்சோதி தோன்றியபோது வீட்டு நெறியினை அறிவுறுத்தவும், சிற்சோதியில் கலப்போர் பாசம் நீங்கவும் ஓதியருளியது ஆகும்.

வேத நான்கினு மெய்ப்பொரு ளாவது
நாதன் நாம **நமச்சி வாயவே.** 1

நம்பு வாரவர் நாவின் நவிற்றினால்
வம்பு நாண்மலர் வார்மது வொப்பது
செம்பொ னார்தில கம்முல குக்கெலாம்
நம்பன் நாம **நமச்சி வாயவே.** 2

நெக்கு ளார்வ மிகப்பெரு கிந்நினைந்(து)
அக்கு மாலைகொ டங்கையில் எண்ணுவார்
தக்க வானவ ராத்தகு விப்பது
நக்கன் நாம **நமச்சி வாயவே.** 3

இயமன் தூதரும் அஞ்சுவர் இன்சொலால்
நயம்வந் தோதவல் லார்தமை நண்ணினால்
நியமந் தானினை வார்க்கினி யான்நெற்றி
நயனன் நாம **நமச்சி வாயவே.** 4

கொல்வா ரேனுங் குணம்பல நன்மைகள்
இல்லா ரேனும் இயம்புவ ராயிடின்
எல்லாத் தீங்கையு நீங்குவ ரென்பரால்
நல்லார் நாம **நமச்சி வாயவே.** 5

மந்த ரம்மன பாவங்கள் மேவிய
பந்த னையவர் தாமும் பகர்வரேல்

---

1. காதல் - அன்பு. நல் நெறி - நல் வழி. நாதன் - சிவபெருமான்.

2. வம்பு - வாசனை. நாண்மலர் - அன்றலர்ந்த மலர். நம்பன் - சிவபெருமான்.

3. ஆர்வம் - அன்பு. அக்குமாலை - உருத்திராட்ச மாலை எண்ணுவார் - செபம் செய்யும் பக்தர்கள். நக்கன் - சிவபெருமான்.

4. நயம் - இனிமை. நியமம் - முறைப்படி. இனியான் - இனிமையானவன். நெற்றி நயனன் - நெற்றிக் கண்ணையுடையவன்.

5. கொல்வார் - கொலை புரிபவர். ஆயிடின் - ஆனால். என்பர் - என்று பெரியோர் கூறுவர். ஆல் - அசை. நல்லார் - எண்குணங்களையும் உடைய இறைவன்.

சிந்தும் வல்வினை செல்வமு மல்குமால்
நந்தி நாம **நமச்சி வாயவே.** 6

நரக மேழ்புக நாடின ராயினும்
உரைசெய் வாயின ராயினு ருத்திரர்
விரவி யேபுகு வித்திடு மென்பரால்
வரதன் நாம **நமச்சி வாயவே.** 7

இலங்கை மன்னன் எடுத்த அடுக்கல்மேல்
தலங்கொள் கால்விரல் சங்கரன் ஊன்றலும்
மலங்கி வாய்மொழி செய்தவன் உய்வகை
நலங்கொள் நாம **நமச்சி வாயவே.** 8

போதன் போதன கண்ணனும் அண்ணல்தன்
பாதந் தான்முடி நேடிய பண்பராய்
யாதுங் காண்பரி தாகி அலந்தவர்
ஓது நாம **நமச்சி வாயவே.** 9

கஞ்சி மண்டையர் கையிலுண் கையர்கள்
வெஞ்சொல் மிண்டர் விரவில ரென்பரால்

---

6. மந்தரம் - மந்தர மலைபோல. பந்தனையவர் - கன்மங்களை யுடையவர். சிந்தும் - அழியும். நந்தி - சிவபெருமான்.

7. நரகம் ஏழ் - அள்ளல், இரெளரவம், கும்பீபாபகம், கூடசாலம், செந்துத்தானம், பூதி, மாபூதி என்னும் ஏழு நரகங்கள். உருத்திரர் - சிவகணங்கள். விரவி - கலந்து நின்று. வரதன் - வரங்களை அருளவல்ல சிவபெருமான்.

8. இலங்கை மன்னன் - இராவணன். அடுக்கல் - கயிலைமலை. சங்கரன் - சிவபெருமான். மலங்கி - கலங்கி. வாய்மொழி செய்தவன் - வாய்விட்டுக் கதறியவன் ; இராவணன்,

9. போதன் - தாமரைப் பூவில் வீற்றிருக்கும் நான்முகன். போது அன - செந்தாமரை மலரை ஒத்த. அண்ணல் - சிவபெருமான். நேடிய - தேடிய. காண்பு - காணுதற்கு. அலந்தவர் - வருந்தியவர். ஓதும் - நாடோறும் ஓதுகின்ற.

விஞ்சை யண்டர்கள் வேண்ட அமுதுசெய்
நஞ்சுண் கண்டன் நமச்சி வாயவே. 10

நந்தி நாம நமச்சிவா யவெனும்
சந்தை யாற்றமிழ் ஞானசம் பந்தன்சொல்
சிந்தை யான்மகிழ்ந் தேத்தவல் லாரெலாம்
பந்த பாசம் அறுக்கவல் லார்களே. 11

திருச்சிற்றம்பலம்

3. திருவீழிமிழலை

பண் - புறநீர்மை *[3-ஆம் திருமுறை]*

திருச்சிற்றம்பலம்

கடுத்தவா ளரக்கன் கைலையன் றெடுத்த
கரமுரஞ் சிரநெரிந் தலற
அடர்த்ததோர் விரலால் அஞ்செழுத் துரைக்க
அருளினன் தடமிகு நெடுவாள்
படித்தநான் மறைகேட் டிருந்தபைங் கிளிகள்
பதங்களை யோதப்பா டிருந்த
விடைக்குலம் பயிற்றும் விரிபொழில் வீழி
மிழலையா னெனவினை கெடுமே. 8

திருச்சிற்றம்பலம்

---

10. கஞ்சி மண்டையர் - கஞ்சியுள்ள வாய்அகன்ற பாத்திரத்தைக் கையில் ஏந்திய பௌத்தர். கையர் - கீழ்மக்கள். மிண்டர் - முரடர். விஞ்சை - வித்தை. அண்டர்கள் - தேவர்கள். நஞ்சு உண் கண்டன் - நீலகண்டன்; சிவபெருமான்.

11. நந்தி - சிவபெருமான். சந்தையால் - சந்தம்பட. பந்த பாசம் - வினைக் கயிறு; பாசவினை.

8. கடுத்த - கோபித்த. வாள் அரக்கன் - கொடிய இராவணன். உரம் - மார்பு. அலர - கதற. நெடு வாள் - பெரிய வாள்; இது சந்திரகாசம் என்னும் பெயர் உடையது. பாடு இருந்த - பக்கத்து இருந்த. விடை - இடபம்.

4. திருவாலவாய்

பண் – புறநீர்மை * [3-ஆம் திருமுறை]

திருச்சிற்றப்பலம்

நாவணங் கியல்பாம் அஞ்செழுத் தோதி
நல்லராய் நல்லியல் பாகும்
கோவணம் பூதி சாதனங் கண்டால்
தொழுதெழு குலச்சிறை போற்ற
ஏவணங் கியல்பாம் இராவணன் திண்டோள்
இருபதும் நெறிதர வூன்றி
ஆவணங் கொண்ட சடைமுடி யண்ணல்
ஆலவா யாவது மிதுவே. 8

திருச்சிற்றம்பலம்

---

* இப்பதிகம், குலச்சிறையார் திருவாலவாயைக் காட்டத் திருஞானசம்பந்தர் கண்டு பாண்டிமாதேவியார், குலச்சிறையார் ஆகிய இவர்கள் தொண்டை வைத்துச் சிறப்பித்துப் பாடியதாகும். இதில் 1, 3, 5, 7, 9-ஆம் பாடல்கள் மங்கையர்க்கரசியார் பணியும், 2, 4, 6, 8, 10-ஆம் பாடல்கள் குலச்சிறையார் பணியும் 11-ஆம் பாடல் இருவர் பணியும் புகழப்பெற்றுள்ளன.

8. நா அணங்கு இயல்பு ஆம்-நாக்கிற்குத் தெய்வத் தன்மையை உண்டாக்குகின்ற. பூதி - விபூதி. சாதனம் - உருத்திராட்சம், சடைமுடி முதலியன. குலச்சிறை - குலச்சிறை நாயனார்; இவர் நெடுமாறனது முதல் மந்திரி. ஆவணம் - அடிமை. ஆலவாய் - இது மதுரை மாநகரிலுள்ள சிவாலயத்தின் பெயர்.

உ
சிவசிவ
செந்திலாண்டவன் துணை

திருநாவுக்கரசு சுவாமிகள்

தேவாரம்

1. பொது

நமச்சிவாயத்திருப்பதிகம்*

பண் – காந்தார பஞ்சமம் [4-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது **நமச்சி வாயவே.** 1

பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக் கருங்கலம் அரன்அஞ் சாடுதல்
கோவினுக் கருங்கலங் கோட்ட மில்லது
நாவினுக் கருங்கலம் **நமச்சி வாயவே.** 2

விண்ணுற அடுக்கிய விறகின் வெவ்வழல்
உண்ணிய புகிலவை யொன்று மில்லையாம்;
பண்ணிய உலகினிற் பயின்ற பாவத்தை
நண்ணிநின் றறுப்பது **நமச்சி வாயவே.** 3

---

* இப்பதிகம், சமணர்கள் திருநாவுக்கரசரைக் கல்லிற் பிணித்துக் கடலில் வீழ்த்தியபோது ஓதியருளியது.

1. துணை சொல் வேதியன் - ஆன்மாக்களுக்கு உற்ற துணை என்று சொல்லப்படும் வேதத்தைக் கூறியவன். பொன் - அழகிய. துணையடி - இரண்டு திருவடி. திருந்தடி - பாசத்தை நீக்கவல்ல திருவடி. கல் தூணை என்பது கல் துணை எனக் குறுகியது.

2. பூவினுக்கு - பூக்களுள். அருங்கலம் - சிறந்தது. அஞ்சு - பஞ்சகவ்வியம். ஆடுதல் - மூழ்குதல். கோவினுக்கு - அரசனுக்கு. கோட்டம் - கொடுங்கோல்.

3. உண்ணிய - உண்ண. புகில் - புகுந்தால். அவை - அவ் விறகுகள். பண்ணிய - மாயா காரியங்களால் பண்ணப்பட்ட. அறுப்பது - அழிக்கவல்லது.

இடுக்கண்பட் டிருக்கினும் இரந்தி யாரையும்
விடுக்கிற் பிராரென்று வினவுவோ மல்லோம்
அடுக்கற்கீழ்க் கிடக்கினு மருளின் நாம்உற்ற
நடுக்கத்தைக் கெடுப்பது **நமச்சி வாயவே.** 4

வெந்தநீ றருங்கலம் விரதி கட்கெலாம்
அந்தணர்க் கருங்கலம் அருமறை ஆறங்கம்
திங்களுக் கருங்கலம் திகழு நீண்முடி
நங்களுக் கருங்கலம் **நமச்சி வாயவே.** 5

சலமிலன் சங்கரன் சார்ந்த வர்க்கலால்
நலமிலன் நாடொறும் நல்கு வான்நலன்
குலமில ராகிலுங் குலத்துக் கேற்பதோர்
நலமிகக் கொடுப்பது **நமச்சி வாயவே.** 6

வீடினார் உலகினில் விழுமிய தொண்டர்கள்
கூடினார் அந்நெறி கூடிச் சென்றலும்
ஓடினேன் ஓடிச் சென்றுருவங் காண்டலும்
நாடினேன் நாடிற்று **நமச்சி வாயவே.** 7

இல்லக விளக்கது இருள்கெ டுப்பது
சொல்லக விளக்கது சோதி யுள்ளது

---

4. இடுக்கண் – துன்பம். யாரையும் - (சிவனைத் தவிர) வேறு யாரையும். விடுக்கிற்பிர் ஆர் - நீக்குவிப்பீர் யார். வினவுவோம் அல்லோம் - கேட்கமாட்டோம். அடுக்கல் - மலை.

5. வெந்த நீறு - சிவாக்கினியினால் தகிக்கப்பெற்ற திருநீறு. விரதிகள் - சிவ விரதம் அனுட்டிக்கும் அன்பர்கள். ஆறு அங்கம் - சிட்சை, கற்பம், வியாகரணம், சந்தோபிசிதம், நிருத்தம், சோதிடம் என்பன. நங்களுக்கு - நமக்கு.

6. சலம் இலன் - விருப்பு வெறுப்பு அற்றவன். சங்கரன் - சுகத்தைச் செய்பவன்; நாடொறும் நலன் நல்குவான் என்க.

7. வீடினார் - (தொண்டர் அல்லாதவர்) அழிந்தார்கள். அந்நெறி - வீட்டு நெறி. நாடினேன் - ஆராய்ந்தேன். நாடிற்று - தானே வந்தடைந்தது.

பல்லக விளக்கது பலருங் காண்பது
நல்லக விளக்கது **நமச்சி வாயவே.** 8

முன்னெறி யாகிய முதல்வன் முக்கணன்
தன்னெறி யேசர ணாதல் திண்ணமே
அந்நெறி யேசென்றங் கடைந்த வர்க்கெலாம்
நன்னெறி யாவது **நமச்சி வாயவே.** 9

மாப்பிணை தழுவிய மாதோர் பாகத்தன்
பூப்பிணை திருந்தடி பொருந்தக் கைதொழ
நாப்பிணை தழுவிய **நமச்சி வாயப்பத்**(து)
ஏத்தவல் லார்தமக் கிடுக்கண் இல்லையே. 10

திருச்சிற்றம்பலம்

---

2. திருநனிபள்ளி

திருநேரிசை [4-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

துஞ்சிருள் காலை மாலை தொடர்ச்சியை மறந்தி ராதே
அஞ்செழுத் தோதின் நாளும் அரனடிக் கன்ப தாகும்
வஞ்சனைப் பாற்சோ றாக்கி வழக்கிலா அமணர் தந்த
நஞ்சமு தாக்கு வித்தார் நனிபள்ளி அடிக ளாரே. 5

திருச்சிற்றம்பலம்

---

8. இல்லக விளக்கு - வீட்டு விளக்கு. சொல்லக விளக்கு-ஞானப் பிரகாசம். பல்லக விளக்கு - சோம சூரியாக்கினி. அக விளக்கு - மன விளக்கு.

9. முன்னெறி - முதன்மையாகிய நெறி. முக்கணன் தன்னெறி - சைவ நெறி. சரண் ஆதல் - புகலிடமாக அடைதல். அங்கு - அத் திருவடிக்கண். அடைந்தவர் - சீவன் முத்தர்.

10. மா - சிறந்த. பிணை தழுவிய - பெண்மான் போன்ற. பூப்பிணை - பூமாலை. நாப்பிணை தழுவிய - நாவினிடத்து இடையறாமல் சொல்லுதலினால் தழும்பேறிப் பதிந்த.

5. இருள் துஞ்சு காலை - இருள் அழிகின்ற காலை; விடியற்காலை. ஓதின் - ஓதினால். அருளும் - அருள் புரிகின்ற. வழக்கிலா - வழங்கிலா-ஈகையில்லாத. அமணர் - சமணர். பின்னிரண்டடியில் திருநாவுக்கரசருக்குச் சமணர் இட்ட நஞ்சு கலந்த பாற்சோற்றை இறைவன் அமுதாக்கிய வரலாறு குறிக்கப்பெற்றுள்ளது.

3. பொது

தனித்திருநேரிசை [4-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

சந்திரற் சடையில் வைத்த சங்கரன் சாம வேதி
அந்தரத் தமரர் பெம்மான் ஆனல்வெள் ளூர்தி யான்றன்
மந்திர நமச்சி வாய ஆகநீ றணியப் பெற்றால்
வெந்தறும் வினையும் நோயும் வெவ்வழல் விறகிட் டன்றே. 4

திருச்சிற்றம்பலம்

---

4. கோயில்

திருவிருத்தம் பண் - கொல்லி [4-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

வைச்ச பொருள்நமக் காகுமென்(று)
எண்ணி **நமச்சிவாய**
அச்ச மொழிந்தேன் அணிதில்லை
யம்பலத் தாடுகின்ற
பிச்சன் பிறப்பிலி பேர்நந்தி
உந்தியின் மேலசைத்த
கச்சின் அழகுகண் டாற்பின்னைக்
கண்கொண்டு காண்பதென்னே. 4

படைக்கல மாகஉன் நாமத்(து)
எழுத்தஞ்சென் நாவிற்கொண்டேன்
இடைக்கலம் அல்லேன் எழுபிறப்
பும்உனக் காட்செய்கின்றேன்

---

4. சாமவேதி - சாமவேதத்தைக் கூறியவன். ஆன் - எருது. நீறு அணியப் பெற்றால் - விபூதி தரித்தால். வெந்தறும் - வெந்து சாம்பலாகும். விறகு இட்டன்றே-விறகில் அக்கினி புகுந்ததுபோலாம்.

4. வைச்ச - வைத்த. பிச்சன் - பித்தன்; சிவன். நந்தி - அழிவில்லாதவன். கச்சு - அரைக் கச்சு. பின்னை - பிற அழகினை.

துடைக்கினும் போகேன் தொழுது
வணங்கித்தூ நீறணிந்துன்
அடைக்கலங் கண்டாய் அணிதில்லைச்
சிற்றம் பலத்தரனே. 8

திருச்சிற்றம்பலம்

---

5. திருப்பாதிரிப்புலியூர்

திருவிருத்தம் [4-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

வைத்த பொருள்நமக் காமென்று
சொல்லி மனத்தடைத்துச்
சித்த மொருக்கிச் **சிவாய**
நமஎன் றிருக்கினல்லால்
மொய்த்த கதிர்மதி போல்வா
ரவர்பா திரிப்புலியூர்
அத்தன் அருள்பெற லாமோ
அறிவிலாப் பேதைநெஞ்சே. 5

கருவாய்க் கிடந்துன் கழலே
நினையுங் கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்துன்றன் நாமம்
பயின்றேன் உனதருளால்

---

8. படைக்கலம் - ஆயுதம். நாமம் - பெயர். இடைக்கலம் - இடைக்காலம். எழு பிறப்பு - தேவர், மக்கள், விலங்கு, புள், ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்பன; இனி உண்டாகின்ற பிறப்புமாம். துடைக்கினும் - தள்ளினும். தூ - பரிசுத்தம்.

5. சித்தம் ஒருக்கி - மனத்தை ஒருவழிப்படுத்தி. என்று-என்று கூறி. மொய்த்த - நிறைந்த. பாதிரிப்புலியூர் அத்தன் - தோன்றாத் துணை நாதர். அறிவிலாப் பேதை - அறிவற்ற தன்மையுடைய.

திருவாய் பொலியச் சிவாய
நமவென்று நீறணிந்தேன்
தருவாய் சிவகதி நீபா
திரிப்புலி யூர்அரனே 6

திருச்சிற்றம்பலம்

6. திருவீழிமிழலை

திருவிருத்தம் [4-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

தீத்தொழி லான்தலை தீயிலிட்
டுச்செய்த வேள்விசெற்றீர்
பேய்த்தொழி லாட்டியைப் பெற்றுடை
யீர்பிடித் துத்திரியும்
வேய்த்தொழி லாளர் மிழலையுள்
ளீர்விக்கி அஞ்செழுத்தும்
ஓத்தொழிந் தும்மை மறக்கினும்
என்னைக் குறிக்கொண்மினே. 4

திருச்சிற்றம்பலம்

---

6. கருவாய்க் கிடந்து - மாதாவின் கருப்பத்துள் கருவாகக் கிடந்தபோது. உருவாய்த் தெரிந்து - உருவமாய் வெளிவந்த பிறகு. உன் நாமம் பயின்றேன் - உனது திருநாமத்தை இடைவிடாமல் சொல்லிப் பழகினேன். பொலிய - நிறைய. நீ: முன்னிலைப் பெயர்.

4. தீத்தொழிலான் - நித்தியாக்கினியை வளர்க்கின்றவன்; தக்கன். தீயில் இட்டு - யாகத்தில் அறுத்து இட்டு. செய்த - அத் தக்கன் செய்த. பேய்த்தொழிலாட்டி - பத்திரகாளி. வேய்த் தொழிலாளர் - வேய்ங்குழல் ஊதுபவர். விக்கி - மரணவத்தை அடையும்போது. ஓத்து - ஓதுதல். என்னை - அடியேனை. குறிக்கொள் - குறித்துக்கொள்.

7. திருநாகைக்காரோணம்

திருவிருத்தம் [4-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

தூமென் மலர்க்கணை கோத்துத்தீ வேள்வி தொழிற்படுத்த
காமன் பொடிபடக் காய்ந்த கடல்நாகைக் காரோணநின்
நாமம் பரவி நமச்சி வாயவென்னும் அஞ்செழுத்தும்
சாமன் றுரைக்கத் தருதிகண் டாய்எங்கள் சங்கரனே. 3

திருச்சிற்றம்பலம்

8. திருக்கடவூர்வீரட்டம்

திருவிருத்தம் [4-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

பதத்தெழு மந்திரம் அஞ்செழுத்
தோதிப் பரிவினொடும்
இதத்தெழு மாணிதன் இன்னுயிர்
உண்ண வெகுண்டடர்த்த
கதத்தெழு காலனைக் கண்குரு
திப்புன லாறொழுக
உதைத்தெழு சேவடி யான்கட
வூருறை உத்தமனே. 2

திருச்சிற்றம்பலம்

---

3. மென் - மெல்லிய. தீ வேள்வி-(திருமணத்துடன் செய்யும்) அக்கினி வழிபாட்டை. தொழிற்படுத்த - நீ செய்ய. காமன் - மன்மதன். சாம் அன்று - இறக்குங் காலத்து. தருதி-வரம் தந்தருள்வாய்.

2. பதம் - சொல். பரிவு - அன்பு. மாணி - பிரமசாரி; இங்கு மார்க்கண்டர். அடர்த்த - நெருங்கிய. கதம் - கடுங்கோபம். கண் குருதிப் புனல் - இரத்தக் கண்ணீர்.

9. திருமீயச்சூர் இளங்கோயில்

திருக்குறுந்தொகை [5-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

பஞ்ச மந்திரம் ஓதும் பரமனார்
அஞ்ச ஆனை யுரித்தன லாடுவார்
நெஞ்சம் வாழி நினைந்திரு மீயச்சூர்
எந்தை மையுடை யார்இளங் கோயிலே. 3

திருச்சிற்றம்பலம்

---

10. திருவையாறு

திருக்குறுந்தொகை [5-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

நெஞ்சம் என்பதோர் நீள்கயந் தன்னுளே
வஞ்சம் என்பதோர் வான்சுழிப் பட்டுநான்
துஞ்சும் போழ்துநின் னாமத் திருவெழுத்து
அஞ்சுந் தோன்ற அருளும்ஐ யாறரே. 3

திருச்சிற்றம்பலம்

---

11. திருநல்லம்

திருக்குறுந்தொகை [5-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

அல்ல லாகஐம் பூதங்க ளாட்டினும்
வல்ல வாறு சிவாய நமவென்று
நல்லம் மேவிய நாத னடிதொழ
வெல்ல வந்த வினைப்பகை வீடுமே. 6

திருச்சிற்றம்பலம்

---

3. பஞ்ச மந்திரம் - ஈசானாதி பஞ்சப்பிரம மந்திரம். அஞ்ச - உமாதேவி அஞ்ச. ஆனை - தாருகவனத்து இருடிகள் விடுத்த யானையை.

3. நீள் கயம் - நீண்ட பெரிய குளம். வஞ்சம் - கபடம். வான் சுழி - பெரிய நீர்ச்சுழி. துஞ்சும் போழ்து - இறக்கும்போது. அருளும் - அருள்புரிவீராக. ஐயாறர் - ஐயாறப்பர்.

6. ஆட்டினும் - வருத்தினாலும். நல்லம் - திருநல்லம்; இது தற்போது 'கோனேரி ராசபுரம்' என வழங்கப்பெறும்.

12. திருப்புகலூர்

திருக்குறுந்தொகை [5-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

விண்ணி னார்மதி சூடிய வேந்தனை
எண்ணி நாமங்கள் ஓதி **எழுத்தஞ்சும்**
கண்ணி னாற்கழல் காண்பிட மேதெனில்
புண்ணி யன்புக லூரும்என் னெஞ்சுமே. 5

திருச்சிற்றம்பலம்

---

13. திருப்பாலைத்துறை

திருக்குறுந்தொகை [5-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

விண்ணி னார்பணிந் தேத்த வியப்புறும்
மண்ணி னார்மற வாதுசி **வாய**வென் று
எண்ணி னார்க்கிட மாஎழில் வானகம்
பண்ணி னாரவர் பாலைத் துறையரே. 6

திருச்சிற்றம்பலம்

---

14. திருநாகேச்சரம்

திருக்குறுந்தொகை [5-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

மானை ஏந்திய கையினர் மையறு
ஞானச் சோதியர் ஆதியர் நாமந்தான்

---

5. வேந்தனை - இறைவனை. கண்ணினால் - மானதமாகச் செபித்தால். கழல் - திருவடி. புண்ணியன் - புண்ணியமே வடிவு கொண்டவன். "புண்ணியன் புகலூரும் என் நெஞ்சும்" என்ற அடிக்கு. "சிற்றம்பலத்தும் என் சிந்தையுள்ளும் உறைவான்" என்ற திருக்கோவையார் அடியினை ஒப்புநோக்குக.

6. விண்ணினார் - தேவர்கள். மண்ணினார் - மண்ணில் வாழும் மக்கள். இடமா - இடமாக. பண்ணினார் - நியமித்தார். வியப்புறும் பாலைத்துறையர் என்க. சிவாய - இது சுத்த பஞ்சாக்கரம்.

ஆன அஞ்செழுத் தோதவர் தண்ணிக்கும்
தேனர் போல்திரு நாகேச் சரவரே. 7

திருச்சிற்றம்பலம்

15. திருப்பழையாறைவடதளி

திருக்குறுந்தொகை [5-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

ஓதி னத்தெழுத் தஞ்சுண ராச்சமண்
வேதி னைப்படுத் தானைவெங் கூற்றதை
பாத னைப்பழை யாறை வடதளி
நாத னைத்தொழ நம்வினை நாசமே. 8

திருச்சிற்றம்பலம்

16. திருமாற்பேறு

திருக்குறுந்தொகை [5-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

ஏதும் ஒன்றும் அறிவில ராயினும்
ஓதி அஞ்செழுத் தும்முணர் வார்கட்குப்
பேத மின்றி யவரவ ருள்ளத்தே
மாதுந் தாமு மகிழ்வர்மாற் பேறரே. 1

7. மை அறு - குற்றமற்ற. ஞானச் சோதியர் - சிவஞானச் சோதியர். அண்ணிக்கும் - இனிக்கின்ற. தேனர்போல் - தேன்போன்றவர்.

8. ஓது இனத்து எழுத்து அஞ்சு - ஓதவேண்டியதாகிய திருவைந்தெழுத்து. சமண் - சமணர். வேதினை - பிணக்கத்தினை.

1. அஞ்செழுத்தும் ஓதி உணர்வார்கட்கு எனக் கூட்டுக. உள்ளத்தே - மனக்கண். மாது - உமை. தாம் - சிவன்.

இருந்து சொல்லுவன் கேண்மின்கள் ஏழைகாள்!
அருந்த வந்தரும் **அஞ்செழுத் தோதினால்**
பொருந்து நோய்பிணி போகத் துரப்பதோர்
மருந்து மாகுவர் மன்னு மாற் பேறரே. 4

திருச்சிற்றம்பலம்

17. திருப்புள்ளிருக்குவேளூர்

திருக்குறுந்தொகை [5-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

உள்ளம் உள்கி உகந்து **சிவனென்று**
மெள்ள உள்க வினைகெடும் மெய்ம்மையே
புள்ளி னார்பணி புள்ளிருக்கு வேளூர்
வள்ளல் பாதம் வணங்கித் தொழுமினே. 8

திருச்சிற்றம்பலம்

18. பொது

தனித்திருக்குறுந்தொகை [5-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

நமச்சி வாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நாநவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே. 2

திருச்சிற்றம்பலம்

---

4. இருந்து - அவரவர் பக்குவம் நோக்கிப் பொறுத்து இருந்து. ஏழைகாள் - அறிவில்லாதவர்களே. மருந்தும் ஆகுவர் - மருந்தாகவும் இருப்பர். மன்னும் - நிலை பெற்ற.

8. உள்கி - நினைந்து. மெள்ள - மெல்ல; மெதுவாக. மெய்ம்மை - உண்மை. புள்ளினார் - சடாயு, சம்பாதி. பணி - பணி புரியும். வள்ளல் - இங்கு இறைவன்.

2. அறி - அறிவிக்க அறிந்த. விச்சை - வித்தை; மந்திரம். நா - எனது நா. நவின்று ஏத்தும் - திடமாக இடைவிடாது துதிக்கும்.

இது சமணர்கள் அப்பரை நீற்றறையில் தள்ளி அடைத்தபோது பாடப்பெற்ற பதிகத்தின் 2-ஆம் திருப்பாடல்.

காலபாசத்
திருக்குறுந்தொகை [5-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

இன்னஞ் கேண்மின் இளம்பிறை சூடிய
மன்னன் பாதம் மனத்துடன் ஏத்துவார்
மன்னும் அஞ்செழுத் தாகிய மந்திரம்
தன்னில் ஒன்றுவல லாரையுஞ் சாரலே. 9

திருச்சிற்றம்பலம்

சித்தத்தொகைத்
திருக்குறுந்தொகை [5-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

நமச்சி வாயஎன் பாருள ரேல்அவர்
தமச்ச நீங்கத் தவநெறி சார்தலால்
அமைத்துக் கொண்டதோர் வாழ்க்கைய ளாகிலும்
இமைத்து நிற்பது சால அரியதே. 22

திருச்சிற்றம்பலம்

19, திருவாவடுதுறை

திருத்தாண்டகம் [6-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

மாற்றேன் எழுத்தஞ்சும் என்றன் நாவின்
மறவேன் திருவருள்கள் வஞ்ச நெஞ்சின்
ஏற்றேன் பிறதெய்வம் எண்ணா நாயேன்
எம்பெருமான் திருவடியே எண்ணின் அல்லால்

---

9. இன்னம் - இன்னும். இளம்பிறை சூடிய மன்னன் - சிவபெருமான். ஒன்று - ஒருமுறை சொல்லுதல். சாரல் - அடையாதே. இது 'சிவனடியார் பக்கம் செல்லற்க' என்று இயமன் தூதுவர்களுக்கு ஆணையிட்டுக் கூறிய பதிகத்தின் 9-ஆம் திருப்பாடல்.

22. என்பார் உளரேல் - என்று சொல்லுகின்றவர் இருந்தால். இமைத்து நிற்பது - விளங்குவது. சால - மிகவும். அரியது - அருமை.

மேற்றுன்நீ செய்வனகள் செய்யக் கண்டு
வேதனைக்கே யிடங்கொடுத்து நாளும் நாளும்
ஆற்றேன் அடியேனை அஞ்சேல் என்னாய்
ஆவடுதண் டுறையுறையும் அமர ரேறே. 2

திருச்சிற்றம்பலம்

---

20. திருவீழிமிழலை

திருத்தாண்டகம் [6-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

தூயானைச் சுடர்ப்பவளச் சோதி யானைத்
தோன்றிய எவ்வுயிர்க்குந் துணையாய் நின்ற
தாயானைச் சக்கரமாற் கீந்தான் தன்னைச்
சங்கரனைச் சந்தோக சாமம் ஓதும்
வாயானை மந்திரிப்பார் மனத்து ளானை
வஞ்சனையால் அஞ்செழுத்தும் வழுத்து வார்க்குச்
சேயானைத் திருவீழி மிழலை யானைச்
சேராதார் தீநெறிக்கே சேர்கின் றாரே. 4

ஆலைப் படுகரும்பின் சாறு போல
அண்ணிக்கும் அஞ்செழுத்தின் நாமத் தான்காண்
சீல முடையடியார் சிந்தை யான்காண்
திரிபுரமூன் றெரிபடுத்த சிலையி னான்காண்

---

2. மாற்றேன் - ஒரு பயன் கருதி மாறி உச்சரியேன். திருவருள்கள் - திருவருள். செய்வனகள் - செய்வன. அஞ்சேல் என்னா - அஞ்சாதே என்று.

4. தாயானை-தாய் ஆனவனை. மாற்கு-திருமாலுக்கு. சந்தோக சாமம் - சந்தோகம் என்னும் பிரிவினையுடைய சாமவேதம். மந்திரிப்பார் - செபிப்பவர். வஞ்சனையால் - உண்மை அன்பு இல்லாமல். வழுத்துவார் - துதிப்பவர். சேயான் - தூரத்தில் இருப்பவன்.

2. அண்ணிக்கும் - தித்திக்கும். சீலம் - தவவொழுக்கம். பண்டரங்கம் - ஒருவகைக் கூத்து. வேலை - கடல்; விண் இழி - ஆகாயத்தினின்றும் இறங்கிய.

பாலினொடு தயிர்நறுநெய் யாடி னான்காண்
பண்டரங்க வேடன்காண் பலிதேர்வான்காண்
வேலை விடமுண்ட மிடற்றினான்காண்
விண்ணிழிதண் வீழி மிழலை யானே. 2

மாலாலும் அறிவரிய வரதர் போலும்
மறவாதார் பிறப்பறுக்க வல்லார் போலும்
நாலாய மறைக்கிறைவ ரானார் போலும்
நாமவெழுத் தஞ்சாய நம்பர் போலும்
வேலார்கை வீரியைமுன் படைத்தார் போலும்
வியன்வீழி மிழலையமர் விகிர்தர் போலும்
ஆலாலம் மிடற்றடக்கி அளித்தார் போலும்
அடியேனை ஆளுடைய அடிகள்தாமே. 6

திருச்சிற்றம்பலம்

---

21. திருக்கன்றுப்பூர்

திருத்தாண்டகம் [6-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

பொசியினால் மிடைந்துபுழுப் பொதிந்த போர்வைப்
பொல்லாத புலாலுடம்பை நிலாசு மென்று
பசியினால் மீதூரப் பட்டே யீட்டிப்
பலர்க்குதவல் அதுவொழிந்து பவள வாயார்
வசியினா லகப்பட்டு வீழா முன்னம்
வானவர்கோன் திருநாமம் அஞ்சுஞ் சொல்லிக்
கசிவினால் தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்றுப்பூர் நடுதறியைக் காண லாமே. 6

---

6. வரதர் - வரத்தை அளிப்பவர். மறவாதார் - என்றும் இடைவிடாது நினைப்பவர். வேல் - சூலம் பொருந்திய. வீரி - பத்திரகாளி.

6. பொசி - துவாரம். புழு - புழுக்கள். நிலாசும் - நிலைபெறும். மீதூர - அதிகரிக்க. பவளவாயார் - பவளம் போன்ற சிவந்த வாயினையுடைய மாதர். வசி - மயக்கம். வானவர்கோன் - சிவபெருமான். கசிவு - மன இளக்கம்.

திருதிமையால் ஐவரையும் காவ லேவித்
திகையாதே **சிவாயநம** வென்னுஞ் சிந்தைச்
சுருதிதனைத் துயக்கறுத்துத் துன்ப வெள்ளக்
கடல்நீந்திக் கரையேறுங் கருத்தே மிக்குப்
பருதிதனைப் பற்பறித்த பாவ நாசா
பரஞ்சுடரே யென்றென்று பரவி நாளும்
கருதிமிகத் தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே. 8

திருச்சிற்றம்பலம்

22. திருக்கச்சியேகம்பம்

திருத்தாண்டகம் [6-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

வருந்தான்காண் மனமுருகி நினையா தார்க்கு
வஞ்சகன்காண் **அஞ்செழுத்து நினைவார்க் கென்றும்**
மருந்தவன்காண் வான்பிணிகள்தீரும் வண்ணம்
வானகமும் மண்ணகமும் மற்று மாகிப்
பரந்தவன்காண் படர்சடையெட் டுடையான் தான்காண்
பங்கயத்தோன் தன்சிரத்தை யேந்தி ஊரூர்
இரந்தவன்காண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன் காண்அவனென் எண்ணத் தானே. 9

திருச்சிற்றம்பலம்

---

8. திருதிமை - தைரியம். ஐவர் - பஞ்சேந்திரியம். திகையாது - மயங்காமல். சிந்தை - சிந்திக்கும். சுருதி - மந்திரம். துயக்கு - பிறவித் துன்பம். பருதி - பூஷா என்னும் சூரியன். பற்பறித்த - பல்லை உடைத்த.

9. நினையார்க்கு வருந்தான் - தன்னைத் தியானியாதவரிடம் வருத்தங்கொள்ளான். வஞ்சகன் - (ஆனால் அவர்கட்கு) வெளிப்படான். மருந்தவன் - மருந்து ஆனவன். வான்பிணிகள் - பெரும் வியாதி. பிறவி நோய்; படர்சடை எட்டு - எட்டுத் திசையும் பரவிய சடை; பங்கயத்தோன் - பிரமதேவன். இரந்தவன் - பலி ஏற்றவன். என் எண்ணத்தான் - எனது மனத்தினுள் இருப்பவன்.

23. திருநாகேச்சரம்

திருத்தாண்டகம் *[6-ஆம் திருமுறை]*

திருச்சிற்றம்பலம்

துறந்தானை அறம்புரியாத் துரிசர் தம்மைத்
தோத்திரங்கள் பலசொல்லி வானோ ரேத்த
நிறைந்தானை நீர்நிலந்தீ வெளிகாற் றாகி
நிற்பனவும் நடப்பனவும் ஆயி னானை
மறந்தானைத் தன்னினையா வஞ்சர் தம்மை
அஞ்செழுத்தும் வாய்நவில வல்லோர்க் கென்றும்
சிறந்தானைத் திருநாகேச் சரத்துளானைச்
சேராதார் நன்னெறிக்கட் சேரா தாரே. 6

திருச்சிற்றம்பலம்

---

24. பொது

பலவகைத் திருத்தாண்டகம் *[6-ஆம் திருமுறை]*

திருச்சிற்றம்பலம்

தந்தையார் தாயா ருடன்பி றந்தார்
தாரமார் புத்திரரார் தாந்தாமாரே
வந்தவா றெங்ஙனே போமா றேதோ
மாயமாம் இதற்கேதும் மகிழ வேண்டாம்
சிந்தையீர் உமக்கொன் று சொல்லக் கேண்மின்
திகழ்மதியும் வாளரவுந் திளைக்குஞ் சென்னி
எந்தையார் **திருநாம நமச்சி வாய**
என்றெழுவார்க் கிருவிசும்பில் இருக்க லாமே. 10

திருச்சிற்றம்பலம்

---

6. துறந்தானை - விருப்பு வெறுப்பு அற்றவனை. துரிசர் - குற்றமுள்ளவர். நிறைந்தானை - எங்கும் நீக்கமற நிறைந்தவனை. தன் - தன்னை. சேராதார் - தியானியாதவர். சேர்தல் - இடைவிடாது நினைத்தல்.

10. தாரம் - மனைவி. வந்தவாறு - பிறப்பின் முதல். போமாறு - சாதல். ஏதும் - சிறிதும். சிந்தையீர் - நல்ல எண்ணமுடையவர்களே! திளைக்கும் - கலந்து பழகும். சென்னி - திருமுடி. எழுவார்க்கு - சொல்லுவார்க்கு. இரு விசும்பு - சிவலோகம்.

தனித் திருத்தாண்டகம் [6-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

திருநாமம் அஞ்செழுத்துஞ் செப்பா ராகில்
தீவண்ணர் திறமொருகால் பேசா ராகில்
ஒருகாலுந் திருக்கோயில் சூழா ராகில்
உண்பதன்முன் மலர்பறித்திட் டுண்ணா ராகில்
அருநோய்கள் கெடவெண்ணீ றணியா ராகில்
அளியற்றார் பிறந்தவா றேதோ என்னில்
பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்துஞ் செத்துப்
பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றாரே. 6

திருச்சிற்றம்பலம்

மறுமாற்றத்
திருத்தாண்டகம்* [6-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

உறவாவார் உருத்திரபல கணத்தி னோர்கள்
உடுப்பனகோ வணத்தொடுகீ ளுளவா மன்றே
செறுவாருஞ் செறமாட்டார் தீமை தானும்
நன்மையாய்ச் சிறப்பதே பிறப்பிற் செல்லோம்

---

6. செப்பார் ஆகில் – சொல்லாராகில். தீ வண்ணர் – செந்நிற முடைய இறைவர். திறம் - பெருமை. உண்பதன் முன் – வண்டுகள் தேனை உண்பதற்குமுன்னே (விடியற்காலத்திலே); தான் உண்பதற்கு முன் எனினுமாம். அருநோய்கள் – அரிய பல நோய்கள்; பிறவி நோயுமாம். அளி - சிவனிடத்து அன்பு.

* இது மகேந்திர பல்லவனின் அமைச்சர்கள் அரசன் கட்டளையை ஏற்றுப் படை சூழத் திருவதிகையை அடைந்து திருநாவுக்கரசரைச் சூழ்ந்து, "ஐயனே! அரசன் உங்களை அழைத்துவருமாறு எங்கட்குக் கட்டளையிட்டுள்ளான். ஆதலால் எங்களுடன் வருக" என்றபோது, "நாமார்க்கும் குடியல்லோம்" என்று அருளிய பதிகம் ஆகும்.

4. கீள் - கிழித்த துணி; இலங்கோடு. செறுவார் - பகைவர்; இங்குச் சமணர். பிறப்பில் - பிறந்துழலும் பிற மதத்தில். நறவு –

நறவார்பொன் னிதழிநறுந் தாரோன் சீரார்
நமச்சிவா யஞ்சொல்ல வல்லோம் நாவால்
சுறவாருங் கொடியானைப் பொடியாக் கண்ட
சுடர்நயனச் சோதியையே தொடர்வுற் றோமே. 4

மூவுருவின் முதலுருவாய் இருநான் கான
மூர்த்தியே என்றுமுப் பத்து மூவர்
தேவர்களும் மிக்கோருஞ் சிறந்து வாழ்த்துஞ்
செம்பவளத் திருமேனிச் சிவனே யென்னும்
நாவுடையார் நமையாள வுடையார் அன்றே
நாவலந்தீ வகத்தினுக்கு நாத ரான
காவலரே ஏவி விடுத்தா ரேனுங்
கடவமலோங் கடுமையொடு களவற் றோமே. 6

திருச்சிற்றம்பலம்

தேன். பொன் இதழி - கொன்றைமலர். சுறவு - மீன். சுறவாருங் கொடியான் - மன்மதன். சோதியையே. ஏ : தோற்றம்.

6. மூவுருவு - பிரமன், திருமால், உருத்திரன். முதல் உரு-முதல் வடிவம். இருநான்கு ஆன மூர்த்தி – அட்டமூர்த்தி. முப்பத்து மூவர் தேவர் – முப்பத்துமுக்கோடி தேவர். மிக்கோர் – முனிவர். ஆள - ஆளுதற்கு உரிமை. நாதர் - தலைவர். கடுமையொடு களவு அற்றோம்– கொடுமையும் களவும் இல்லாதவரானோம்.

குறிப்பு: இந்நூல் 17-ஆம் பக்கம் 13 திருப்பாலைத்துறை திருக் குறுந்தொகை "வேதங்கள் நான்கு என்றும், மூன்று என்றும் விரிக்கப் படுவதுபோலவே தமிழ் வேதமும் சைவசமயாசாரியர்கள் அருளிய தேவாரமும் திருவாசகம் கோவையும் சேர்த்து நான்கு என்றும், தேவா ரம் மூவரருளியவாற்றுல் மூன்று என்றும் விரிக்கப்படும். இத்தேவாரங் களுள் மூன்றனுள் இடையில் விளங்குவது திருநாவுக்கரசர் அருளிய தேவாரம்; அதன் மூன்று திருமுறைகளில் இடையில் நிற்பது திருக் குறுந்தொகையாகிய (ஐந்தாம்) திருமுறை; அத்திருமுறையினுள் நடுவுள் இருப்பது 51-வது திருப்பதிகமாகிய திருப்பாலைத்துறைத் திருப்பதிகம் - அதன் பதினொரு திருப்பாசுரங்களுள் நடுவனதாகிய 6-ஆம் திருப்பாட்டில் '**சிவாய**' என்னும் பாசமொருவிய சீ பஞ்சாக் கரம் விளங்குவது காண்க. (C. K. S. குறிப்பு உரை).

உ
சிவ சிவ
செந்திலாண்டவன் துணை
திருச்சிற்றம்பலம்

சுந்தரமூர்த்தி சுவாமிகள்

தேவாரம்

1. திருப்பாண்டிக்கொடுமுடி

பண் - பழம்பஞ்சுரம் *[7-ஆம் திருமுறை]*

திருச்சிற்றம்பலம்

மற்றுப்பற்றெனக் கின்றிநின் திருப்
பாதமேமனம் பாவித்தேன்
பெற்றலும்பிறந் தேன்இனிப்பிற
வாததன்மைவந் தெய்தினேன்
கற்றவர்தொழு தேத்துஞ்சீர்க்கறை
யூரிற்பாண்டிக் கொடுமுடி
நற்றவா! உனை நான்மறக்கினுஞ்
சொல்லும்நா **நமச்சிவாயவே.** 1

இட்டன் நும்மடி ஏத்துவாரிகழ்ந்
திட்டநாள்மறந் திட்டநாள்
கெட்டநாளிவை யென்றலாற்கரு
தேன்கிளர்புனற் காவிரி
வட்டவாசிகை கொண்டடிதொழு
தேத்துபாண்டிக் கொடுமுடி
நட்டவா! உனை நான்மறக்கினுஞ்
சொல்லும்நா **நமச்சிவாயவே.** 2

---

1. மனம் பாவித்தேன் - மனத்தில் தியானித்திருந்தேன். பெற்றல் - நினைக்கப் பெறுதல். பிறந்தேன் - பிறந்ததன் பயனை அடைந்தேன். கறையூர் - இங்கு ஒரு பாண்டியனுக்குக் கறை (குற்றம்) தீர்ந்த காரணத்தால் இப் பெயர் பெற்றது. பாண்டிக் கொடுமுடி - இது கொடுமுடி என வழங்கப்பெறும்; மாமேருவின் சிகரங்களுள் ஒன்று என்பது இதன் வரலாறு. நல் தவா - நல்ல தலைவனே. நா சொல்லும் - என்னுடைய நா இடைவிடாது சொல்லும்.

2. இட்டன் - இஷ்டன்; நண்பன். இகழ்தல் - மதியாதிருத்தல். வட்ட வாசிகை - வட்டமாகிய பூமாலை. நட்டவா - ஆன்மாக்களைக் கருணையினால் நட்புக் கொண்டவனே.

ஓவுநாளுணர் வழியுநாளுயிர்
போகுநாளுயர் பாடைமேல்
காவுநாளிவை யென்றலாற்கரு
தேன்கிளர்புனற் காவிரிப்
பாவுதண்புனல் வந்திழிபரஞ்
சோதிபாண்டிக் கொடுமுடி
நாவலா!உனை நான்மறக்கினுஞ்
சொல்லும்நா **நமச்சிவாயவே.** 3

எல்லையில்புகழ் எம்பிரானெந்தை
தம்பிரானென்பொன் மாமணி
கல்லையுந்தி வளம்பொழிந்திழி
காவிரியதன் வாய்க்கரை
நல்லவர்தொழு தேத்துஞ்சீர்க்கறை
யூரிற்பாண்டிக் கொடுமுடி
வல்லவா!உனை நான்மறக்கினுஞ்
சொல்லும்நா **நமச்சிவாயவே.** 4

அஞ்சினார்க்(கு)அர ணாதியென்றடி
யேனும்நான்மிக அஞ்சினேன்
அஞ்சலென்றடித் தொண்டனேற்கருள்
நல்கினாய்க்(கு)அழி கின்றதென்
பஞ்சின்மெல்லடிப் பாவைமார்குடைந்
தாடுபாண்டிக் கொடுமுடி
நஞ்சணிகண்ட! நான்மறக்கினுஞ்
சொல்லுநா **நமச்சிவாயவே.** 5

---

3. ஓவும் நாள் – உன்னைவிட்டு நீங்கும் நாட்கள்; (உன் திருவைந்தெழுத்தை மறந்திருக்கும் நாள்). காவும் நாள் – சுமக்கப்படும் நாட்கள். பாவு - பரந்த. நாவலா – ஆசிரியத் தன்மை யுடையவனே.

4. எந்தை - என் தந்தை. தம்பிரான் - தலைவன். உந்தி - செலுத்தி. வாய்க்கரை - கரையினிடத்து. நல்லவர் - அன்பர். வல்லவா - எல்லா வல்லமையுமுடையவனே.

5. அரண் - அடைக்கலம். அருள் நல்கினாய்க்கு அழிகின்றது என் - திருவருள் பாலித்தால் உமக்கு வரும் நஷ்டம் என்ன? குடைந்து ஆடும் - மூழ்கி விளையாடும்.

ஏடுவான்இளந் திங்கள்சூடினை
யென்பின்கொல்புலித் தோலின்மேல்
ஆடுபாம்பது அரைக்கசைத்த
அழகனே!அந்தண் காவிரிப்
பாடுதண்புனல் வந்திழிபரஞ்
சோதிபாண்டிக் கொடுமுடிச்
சேடனே!உனை நான்மறக்கினுஞ்
சொல்லும்நா **நமச்சிவாயவே.** 6

விரும்பிநின்மலர்ப் பாதமேநினைந்
தேன்வினைகளும் விண்டன
நெருங்கிவண்பொழில் சூழ்ந்தெழில்பெற
நின்றகாவிரிக் கோட்டிடைக்
குரும்பைமென்முலைக் கோதைமார்குடைந்து
ஆடுபாண்டிக் கொடுமுடி
விரும்பனே!உனை நான்மறக்கினுஞ்
சொல்லும்நா **நமச்சிவாயவே.** 7

செம்பொன் நேர்சடை யாய்திரிபுரந்
தீயெழச்சிலை கோலினாய்
வம்புலாங்குழ லாளைப்பாகம்
அமர்ந்துகாவிரிக் கோட்டிடைக்
கொம்பின்மேற்குயில் கூவமாமயில்
ஆடுபாண்டிக் கொடுமுடி
நம்பனே!உனை நான்மறக்கினுஞ்
சொல்லும்நா **நமச்சிவாயவே.** 8

---

6. ஏடுவான் - தகட்டு வடிவினையுடைய ஆகாயத்தில் சஞ்சரிக்கின்ற. பாடு - பாடுவதுபோல் ஒலித்து ஓடுகின்ற. சேடன் - எல்லாம் அழிந்தாலும் தான்மட்டும் அழியாமல் எஞ்சியிருப்பவன்.

7. நின் - உன்னுடைய. மலர்ப்பாதம் - மலராகிய திருவடிகளை. விண்டன - விலகின. கோட்டிடை - கரையில். குரும்பை - தென்னங் குரும்பை. விரும்பனே - விரும்புதற்கு உரியவனே.

8. செம்பொன் ஏர் - செம்பொன்னைப்போன்ற. கோலினாய் - வளைத்தாய். வம்பு உலாம் குழலாள் - இயற்கை மணம் வீசும் கூந்தலையுடைய உமாதேவியார். நம்பனே - நம்பி வழிபடத்தக்கவனே.

சாரணன் தந்தை எம்பிரானெந்தை
தம்பிரானென்பொன் மாமணியென்று
பேரெண்ணாயிர கோடிதேவர்
பிதற்றிநின்று பிரிகிலார்
நாரணன்பிர மன்தொழுங்கறை
யூரிற்பாண்டிக் கொடுமுடிக்
காரணா!உனை நான்மறக்கினுஞ்
சொல்லும்நா நமச்சிவாயவே. 9

கோணியபிறை சூடியைக்கறை
யூரிற்பாண்டிக் கொடுமுடி
பேணியபெரு மானைப்பிஞ்ஞகப்
பித்தனைப்பிறப் பில்லியைப்
பாணுலாவரி வண்டறை கொன்றைத்
தாரனைப்படப் பாம்பரை
நாணனைத்தொண்ட னூரன்சொல்லிவை
சொல்லுவார்க்கில்லை துன்பமே. 10

திருச்சிற்றம்பலம்

---

2. திருவலிவலம்

பண் - தக்கேசி [7-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

ஊனங் கத்(து)உயிர்ப் பாயுல கெல்லாம்[1]
ஓங்கா ரத்துரு வாகிநின் றானை
[2]வானங் கைத்தவர்க் கும்அளப் பரிய
வள்ள லைஅடி யார்கள்தம் முள்ளத்

---

9. சாரணன் - புகலிடமாக உள்ளவவன். பேர் - உனது திருப்பெயர். எண்ணாயிர கோடி - இது பன்மை குறித்து நின்றது: "பேராயிரமுடையான்" என்று கொள்க. பிதற்றி - பேரன்போடு. காரணா - சர்வ காரணனே.

பா-ம். 1 உயிர்க்கெல்லாம். 2 வானங்கத்தவர்க்.

[1]தேனங் கைத்தமு தாகியுள் ளூறுந்
தேச னைத்திளைத் தற்கினி யானை
மானங் கைத்தல(து) ஏந்தவல் லானை
வலிவ லந்தனில் வந்துகண் டேனே. 1

திருச்சிற்றம்பலம்

---

3. திருவாரூர்

பண் – புறநீர்மை [7-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

அந்தியும் நண்பகலும் அஞ்சுப தஞ்சொல்லி
முந்தி யெழும்பழைய வல்வினை மூடாமுன்
சிந்தை பராமரியாத் தென்றிரு வாரூர்புக்(கு)
எந்தை பிரானாரை என்றுகொல் எய்துவதே. 1

திருச்சிற்றம்பலம்

---

1. ஊன் அங்கத்து - ஊனால் ஆகிய உடலுள். உயிர்ப்பாய் - மூச்சுக் காற்றாய். வானங் கைத்தவர் - சுவர்க்கத்தை வெறுத்தவர்; மோட்சத்தை விரும்பியவர். தேசன் - ஒளி வடிவானவன். திளைத்தற்கு - மனங்கலந்து அனுபவித்தற்கு. மான் - மானை.

1. அந்தி - சந்தி: இது காலையும் மாலையும் ஆகும். நண்பகல் - நடுப்பகல். அஞ்சுபதம் சொல்லி - திருவைந்தெழுத்தை ஓதி. திருவைந்தெழுத்தில் ஒவ்வொரு எழுத்தும் ஒவ்வொரு பொருளை உணர்த்துவதால் 'பதம்' என்றார். பழைய வல்வினை-ஆகாமிய சஞ்சித வினைகள். சிந்தை பராமரியா - சிந்தையால் ஆராய்ந்து. தென் - அழகிய; தென்றிசையிலுள்ள எனினுமாம்.

பா - ம்: 1 தேனங்கத்தமுதாக.

சிவசிவ

செந்திலாண்டவன் துணை

திருச்சிற்றம்பலம்

மெய்கண்ட சாத்திரம்

1. திருக்களிற்றுப்படியார்

அஞ்செழுத்து மேஅம்மை அப்பர்தமைக் காட்டுதலால்
அஞ்செழுத்தை ஆருகப் பெற்றறிந்தே—அஞ்செழுத்தை
ஓதப்புக் குள்ள மதியுங் கெடில்உமைகோன்
கேதமற வந்தளிக்குங் கேள். 1

—உய்யவந்ததேவ நாயனார்

2. சிவஞான போதம்

ஒன்பதாஞ் சூத்திரம்

ஊனக்கண் பாசம் உணராப் பதியை
ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி
உராத்துனைத் தேர்த்தெனப் பாசம் ஒருவத்
தண்ணிழலாம் பதிவிதி எண்ணும்அஞ் செழுத்தே.

—மெய்கண்டதேவ நாயனார்

---

1. அஞ்செழுத்துமே - அகார உகார மகார விந்து நாதம் என்கின்ற ஐந்தெழுத்தாகிய பிரணவமே. (இவற்றிற்கு முறையே பிரமன், திருமால், உருத்திரன், மகேசன், சதாசிவன் என்னும் ஐவர் அதிதேவதைகளாம்). ஆருக - மூலாதாரம் முதலிய ஆருதாரங்களின் வழியாக. பெற்று - குருவின் உபதேசத்தால் பெற்று. உள்ள மதியும் கெடில் - ஆன்ம போதமும் கெட்டால்.

9. ஊனக்கண் - குறையுணர்வாகிய பசு ஞானம். ஞானக்கண் - திருவடி ஞானம். உரா துனை தேர்த்து - ஒருவர் ஊராததாகிய விரைந்து செல்லும் கானல்தேர். விதி எண்ணும் - விதிப்படி மானதமாகச் செபிக்கும். பதி தண் நிழல் ஆம் என்க.

சிவஞான போதம்—உதாரண வெண்பா :

ஒன்றறிந்த(து) ஒன்றறியா தாகி உடல்மன்னி
அன்றும் புலனும்அவ் வஞ்செழுத்தை - ஒன்றறிதல்
உள்ளதே யாகில் அதுநீ தனித்தனிகண்(டு)
உள்ளலவை ஒன்றல்லை ஓர். (3-ஆம் சூத்திரம்) 1

அகார உகாரம் அகங்காரம் புத்தி
மகாரம் மனஞ்சித்தம் விந்துப் – பகா(து)இவற்றை
நாதம் உளவடிவாம் நாடிற் பிரணவமாம்
போதங் கடற்றிரையே போன்று. (4-ஆம் சூ-ம்) 2

எண்ணில(வு) ஓங்காரத்(து) ஈசர் சதாசிவமாம்
நண்ணிய விந்துவொடு நாதத்துக் – கண்ணில்
பகர்அயன்மா லோடு பரமன் அதிதெய்வம்
அகரஉக ரம்மகரத் தாம். (4-ஆம் சூ-ம்) 3

அஞ்செழுத்தால் உள்ளம் அரனுடைமை கண்டரனை
அஞ்செழுத்தால் அர்ச்சித்(து) இதயத்தில் – அஞ்செழுத்தால்

---

1. ஒன்று அறிந்தது ஒன்று அறியாது ஆகி - ஒன்றை அறிந்த இந்திரியம் மற்றொன்றை அறியாததாகி. அன்றும் - தம்முள் மாறுபடும். புலன் ஆய் அவ் அஞ்செழுத்தை - சத்தம் முதலிய புலன்களை அச் சூக்கும பஞ்சக்கரத்தால் செலுத்தப்பட்டு ஆராய்ந்து அறிகின்ற பொறிகளின் தொழிற்பாட்டை. உள்ளல் - அறியமாட்டாதவர்களாய்.

2. அகாரம் - அகங்காரத்தினையும்; உகாரம் - புத்தியினையும்; மகாரம் - மனத்தினையும்; விந்து - சித்தத்தினையும். பகாது—பகுக்காது. நாதம் உயிரினையும் செலுத்துகின்றன. போதம் - உணர்வு.

3. எண் நிலவு-மானதக் காட்சியில் விளங்கிய; நாதம் சதாசிவம்; விந்து; ஈசன் (மகேசன்) மகரம். பரமன் (சிவன்); உகரம் திருமால்; அகரம் - பிரமன். இங்குக் குறிப்பிட்ட பரமன், திருமால், பிரமன் இவர்கள் சுத்தவித்தையின்கண் வைகுவோர் ஆவர்.

4. உள்ளம் - உயிர். அஞ்செழுத்தால் கண்டு - அஞ்செழுத்தை உச்சரிக்கும் முறையில் வைத்து நோக்கி. இதயம் என்றதனால் உந்தி, புருவநடுவும் கொள்க; இதயம் பூசைத்தானம்; உந்தி ஓமத்தானம்; புருவநடு தியானத்தானம்; குண்டலி - உந்தித்தானம். கோதண்டப்-

குண்டலியிற் செய்தோமங் கோதண்டஞ் சானிக்கில்
அண்டனும் சேடனும் அங்கு. (9-ஆம் சூ-ம்) 4

இந்துவில் பானுவில் ராகுவைக் கண்டாங்குச்
சிந்தையில் காணில் சிவன்கண்ணும் — உந்தவே
காட்டாக்கில் தோன்றிக் கனல்சேர் இரும்பென்ன
ஆட்டானும் ஓதஞ் செழுத்து. (9-ஆம் சூ-ம்) 5

3. சிவஞான சித்தியார்

ஓசைதரும் **அஞ்செழுத்தை** விதிப்படி உச்சரிக்க
உள்ளத்தே புகுந்தளிப்பன் ஊனமெலாம் ஓட. 1

அஞ்செழுத்தால் ஆன்மாவை அரனுடைய பரிசும்
அரனுருவும் அஞ்செழுத்தால் அமைந்தமையும் அறிந்திட்(டு),
அஞ்செழுத்தால் அங்ககர நியாசம் பண்ணி
ஆன்மாவின் அஞ்செழுத்தால் இதயத் தர்ச்சித்(து),
அஞ்செழுத்தால் குண்டலியின் அனலை யோம்பி
அணைவரிய கோதண்டம் அணைந்தருளின் வழிநின்(று)
அஞ்செழுத்தை விதிப்படியுச் சரிக்கமதி யருக்கன்
அணையரவம் போல்தோன்றும் ஆன்மாவில் அரனே. 2

—அருணந்தி சிவாசாரியார்

புருவநடு. சானிக்கில் - சிவோகம்பாவனைசெய்யின். சேடன் - அடிமையாவன்.

5. இந்து - சந்திரன். பானு - சூரியன். ராகுவை - இராகுகேதுக்களை. கண்டாங்கு - கிரகணத்தில் கண்டாற்போல: உந்த - கடையவே. காட்டாக்கில் தோன்றி - விறகில் தீப்போலத்தோன்றி. ஆள்தானும் - (அம்முதல்வனுக்கு) அடிமையாம்

1. ஓசைதரும் - சிலம்பொலிக்கும் திருவடி ஞானத்தைத்தரும். விதிப்படி - (ஆசாரியன் கூறிய) முறைப்படி (அறிந்து). புகுந்து - ஞானத்தை விளக்கி. ஊனம் - பாசம்.

2. பரிசு - தன்மை, அஞ்செழுத்தால் - திருவைந்தெழுத்து ஓதும் முறையில்வைத்து உணர்ந்து. அங்ககர நியாசம் - அங்கநியாசம் கரநியாசம்; இவை சைவானுட்டானம் சிவ பூசை முதலியவற்றில் வரும் கிரியை : (நியாசம் - தொடுதல்.) குண்டலி - மூலாதாரம். ஓம்பி - வளர்த்து. கோதண்டம்-புருவநடு. மதி அருக்கன் அணை அரவம்போல்-சந்திரசூரியரிடத்து இராகுகேதுக்கள் காணப்படுமாறுபோல.

4. உண்மை விளக்கம்

ஆறாறு தத்துவமே(து) ஆணவமே(து) அன்றேதான்
மாறா வினையேது மற்றிவற்றின் — வேறாகா
நானேது நீயேது நாதனடம் அஞ்செழுத்துத்
தானேது தேசிகனே! சாற்று. 1

நற்றவத்தோர் தாங்காண நாதாந்தத்(து) அஞ்செழுத்தால்
உற்றுருவாய் நின்றாடல் உள்ளபடி — பெற்றிடநான்
விண்ணார் பொழில்வெண்ணெய் மெய்கண்ட நாதனே!
தண்ணார் அருளாலே சாற்று. 2

எட்டும் இரண்டும் உருவான லிங்கத்தே
நட்டம் புதல்வா! நவிலக்கேள் — சிட்டன்
சிவாயநம வென்னுந் திருவெழுத்தஞ் சாலே
அவாயமற நின்றாடு வான். 3

ஆடும் படிகேள்நல் அம்பலத்தான் ஐயனே!
நாடுந் திருவடியி லேநகரம் — கூடும்
மகரம் உதரம் வளர்தோள் சிகரம்
பகருமுகம் வாமுடியப் பார். 4

---

1. ஆறாறுதத்துவம் - முப்பத்தாறுதத்துவம்; இஃது உண்ணிலைக் கருவிகள். அன்றேதான்மாறா ஆணவம் எனக்கூட்டுக. வேறாகா - வேறாகாமல் (ஒன்றுபட்டிருக்கும்). நாதன் - இறைவன். தேசிகனே — ஆசாரிய மூர்த்தியே.

2. நாதாந்தத்து - நாத முடியிலே (சிவபெருமான்). உருவாய் உற்று - வடிவாய்ப் பொருந்தி. விண் ஆர் - ஆகாயத்தை அளாவிய. வெண்ணெய் - திருவெண்ணெய்நல்லூர். சாற்று - அருளவேண்டும்.

3. எட்டும் இரண்டும் - பத்து; பத்தின் தமிழ் எழுத்து-'ய' என்பது. இலிங்கத்தே - ஆன்மாவிடத்தே. நட்டம் - நடனம். புதல்வா - மாணாக்கனே. சிட்டன் - சிவபெருமான் யம் அற - ஆன்மாக்களின் பிறவி நீங்க.

4. ஐயனே - மாணவனே! இஃது அன்புபற்றியது. ஆடும்படி கேள் - நடமாடும் முறையினைக்கேள். உதரம் - வயிறு (உந்தி). முடியப்பார் - திருமுடியிலே யகரமாகப் பார்.

சேர்க்கும் துடி**சிகரம்** சிக்கனவா வீசுகரம்
ஆர்க்கும் **யகரம்** அபயகரம் – பார்க்கிலிறைக்(கு)
அங்கி **நகரம்** அடிக்கீழ் முயலகனார்
தங்கும் **மகர**மது தான். 5

ஓங்கார மேநல் திருவாசி உற்றதனில்
நீங்கா எழுத்தே நிறைசுடராம் – ஆங்காரம்
அற்றார் அறிவரணி அம்பலத்தான் ஆடலிது
பெற்றார் பிறப்பற்றார் பின். 6

தோற்றம் துடியதனில் தோயும்திதி அமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் – ஊற்றமா
ஊன்று மலர்ப்பதத்தில் உற்றதிரோ தம்முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு. 7

***ப**ரையிடமா நின்றுமிகு பஞ்சாக் கரத்தால்
உரைஉணர்வுக்(கு) எட்டா ஒருவன் – வரைமகள்தான்
காணும் படியே கருணைஉருக் கொண்டாடல்
பேணுமவர்க் குண்டோ பிறப்பு. 8

நாதாந்த நாடகத்தை நன்றாய் அருள்செய்தீர்
ஓதீர் **எழுத்தஞ்சும்** உள்ளபடி – தீதறவே

---

5. ஆர்க்கும்துடி சேர்க்கும்கரம் - ஒலிக்கின்ற டமருகம் ஏந்திய திருக்கரம். சிக்கன - நன்றாக. அங்கி இறைக்கு - அக்கினி ஏந்திய திருக்கரத்தில்.

6. அதனில் நீங்கா - அப்பிரணவத்தைவிட்டு நீங்காத. ஆங்காரம் - அகங்காரம்; யான் எனது என்னும் செருக்கு. பெற்றார் - தரிசித்தவர்.

7. தோற்றம் - படைத்தல். துடி - உடுக்கை. திதி - காத்தல். அமைப்பு - அபயகரம். ஊற்றமா - உறுதியாக. திரோதம் - மறைத்தல். நான்றமலர்ப்பதம் - தூக்கிய திருவடி.

8. உரை உணர்வுக்கு எட்டா - மனவாக்குக் காயங்களுக்கு எட்டாத. ஒருவன் - ஒப்பற்ற சிவபெருமான். மிகு - மேலான. பரையிடமா - பராசத்தியாகிய திருவம்பலமே இடமாக நின்று.

9. நாதாந்த நாடகம் - தத்துவாதீதமாக இருக்கும் திருக்கூத்து. தஞ்சம் - புகலிடமாக (இருக்கும்).

* பா-ம்: "உரை உணர்வுக்கெட்டா ஒருவன் மிகுபஞ்சாக்கரத்தால் வரைமகள்தான் – பரையிடமாக"

அஞ்செழுத்தீ தாகில் அழியுமெழுத் தாய்விடுமோ
தஞ்ச அருட்குருவே! சாற்று. 9

உற்ற குறியழியும் ஓதுங்கால் பாடைகளில்
சற்றும் பொருள்தான் சலியாது — மற்றதுகேள்
ஈசனருள் ஆவி எழிலார் திரோதமலம்
ஆசிலெழுத் தஞ்சினடை வாம். 10

சிவனருள் ஆவி திரோதமலம் ஐந்தும்
அவனெழுத் தஞ்சின் அடைவாம் — இவனின்று
நம்முதலா ஓதிலருள் நாடாது நாடுமருள்
சிம்முதலா ஓதுநீ சென்று. 11

அண்ணல் முதலா அழகார் எழுத்தைந்தும்
எண்ணில் இராப்பகலற் றின்பத்தே — நண்ணி
அருளா னதுசிவத்தே யாக்கும் அணுவை
இருளா னதுதீர இன்று. 12

ஆதி மலமிரண்டும் ஆதியாய் ஓதினால்
சேதியா மும்மலமுந் தீர்வாகா — போதம்
மதிப்பரிதாம் இன்பத்தே வாழலாம் மாறி
விதிப்படிஓ(து) அஞ்செழுத்து மே. 13

---

10. உற்றகுறி - பொருந்திய எழுத்துக்களின் குறிகள். பாடைகளில் - பதினெண்மொழிகளிலே. பதினெண்மொழி - திராவிடம், சிங்களம், சோனகம், சாவகம், சீனம், துளுவம், குடகம், கொங்கணம், கன்னடம், கொல்லம், தெலுங்கம், கலிங்கம், வங்கம், கங்கம், மகதம், கடாரம், கௌடம், குசலம் என்பன. ஆவி - ஆன்மா. அடைவாம் - பொருள் அமையும் முறையாம்.

11. எழுத்து அஞ்சு - நமசிவய என்னும் எழுத்து ஐந்து. சிம்முதலா - சி என்று தொடங்கும் (சிவயநம). ஓது - ஓதினால் அருள் உண்டாகும்.

12. அண்ணல் முதலா - சி என்ற எழுத்து முதலா. இராப்பகல் அற்று - கேவல சகலங்கள் நீங்கியவிடத்தே. அணுவை - ஆன்மாவை. இருளானது - மலவிருளானது.

13. ஆதி - ஆதியாகிய. மலம் இரண்டும் - மல எழுத்துக்களாகிய நம என்ற இரண்டும், ஆதியாய்-அடியாக, மதிப்பரிதாம்-ஆன்மபோதத்தால் மதித்தற்கு அரியதாகிய, இன்பம் - பேரின்பம்.

அஞ்செழுத்தே ஆகமமும் அண்ணல் அருமறையும்
அஞ்செழுத்தே ஆதிபுரா ணம்மனைத்தும்—அஞ்செழுத்தே
ஆனந்தத் தாண்டவமும் யாவைக்கும் அப்பாலாம்
மோனந்த மாமுத்தி யும். 14

—திருவதிகை மனவாசகங்கடந்தார்

5. சிவப்பிரகாசம்

பந்தமா னவைய றுத்துப் பவுதிகம் உழலும் எல்லைச்
சந்தியா தொழியா திங்குத் தன்மைபோல் வினையுஞ் சாரும்
அந்தமா திகளி லாத அஞ்செழுத் தருளி னாலே
வந்தவா றுரைசெய் வாரை வாதியா பேதி யாவே. 1

திருவெழுத் தைந்தில் ஆன்மாத் திரோதமா சருள்சி வஞ்சூழ்
தரநடு நின்ற தொன்றுந் தன்மையுந் தொன்மை யாகி
வரு மந மிகுதி யாலே வாசியி லாசை யின்றிக்
கருவழிச் சுழலு மாறுங் காதலார்க் கோத லாமே. 2

ஆசுறு திரோத மேவா தகலுமா சிவமுன் னாக
ஓசைகொள் அதனில் நம் மேல் ஒழித்தருள் ஓங்கும் மீள
வாசியை அருளும் மாயா மற்றது பற்று உற்றங்(கு)
ஈசனில் ஏக மாகும் இதுதிரு வெழுத்தின் ஈடே. 3

---

14. அண்ணல் அருமறையும் ஆகமமும் அஞ்செழுத்தே எனக் கூட்டுக. ஆதிபுராணம் - முதன்மை பெற்ற புராணங்கள். யாவைக்கும் அப்பாலாம் - இது தத்துவாதீதம். மாமுத்தி - பரமுத்தி.

1. பந்தமானவை - (ஞானதீக்கையினாலே மும்மலக்) கட்டுகளை. அறுத்து - (ஆசாரியன்) நீக்கி. சந்தியாது ஒழியாது - (பிராரத்துவ வினை) தாக்காதிராது. வினையும் - ஆகாமியமும். அருளினாலே - (ஆசாரியன்) அனுக்கிரகத்தினாலே. வாதியா - (பிராரத்துவவினை) தாக்காது.

2. திரோதம் - திரோதானசத்தி. மாசு - ஆணவமலம், ஒன்றும் தன்மையின் - ஒரு தொடரான இயல்பினாலே. வரும் - வாராநிற்கும். வாசி - சிவம். கருவழி - பிறப்பிலே. வாசியில் ஆசை இன்றுதல் - நம முதலாக உச்சரிக்கை.

3. ஆசு - ஆணவமலம். சிவம்முன்னாக - சிவமுதலாக, நம் மீள மேல் ஒழித்து - நகாரமாகிய திரோதான சத்தி தானே மீண்டும் மேலான மலத்தைப் போக்கி. மாய-மகத்தான யகரமான ஆன்மா. ஈடு-உண்மை.

மண்முதல் கரண மெல்லாம் மறுவ சத்தாக்கி ஞானக்
கண்ணினில் ஊன்றி அந்தக் கருத்தினல் எவையும் நோக்கி
எண்ணிஅஞ் செழுத்து மாறி யிறைநிறை வுணர்ந்து போற்றல்
புண்ணியன் தனக்கு ஞான பூசையாய்ப் புகலும் அன்றே. 4

—உமாபதி சிவாசாரியார்

6. திருவருட் பயன்

ஐந்தெழுத்தருள் நிலை

அருள்நூலும் ஆரணமும் அல்லாதும் ஐந்தின்
பொருள்நூல் தெரியப் புகின். 1

இறைசத்தி பாசம் எழில்மாயை ஆவி
உறநிற்கும் ஓங்காரத் துள். 2

ஊன நடனம் ஒருபால் ஒருபாலாம்
ஞானநடம் தான்நடுவே நாடு. 3

---

4. மண்முதற்கரணம் எல்லாம் - மண்முதலிய தத்துவங்களை யெல்லாம். மறுவசத்தாக்கி - பரவசமாக்கி. மாறி-சிகாரமுதலாகமாறி. நிறை - பரிபூரணத்தன்மை. புண்ணியன் - சிவபெருமான். ஞானபூசை - பூதசுத்தி. அன்மசுத்தி. திரவியசுத்தி. மந்திரசுத்தி. இலிங்கசுத்தி என்னும் பஞ்சசுத்தியோடு கூடிய ஞானபூசை. புகலும் - (சிவாகமம்) கூறும்.

1. சைவாகமங்களினது கருத்தினையும். வேதங்களினது கருத்தினையும். இவையிரண்டும் அல்லாத பல கலைகளினது கருத்தினையும் கற்று வல்லோர் ஆராயப்புகின். அவை யாவும் ஸ்ரீ பஞ்சாட்சரத்தின் பொருளாகிய பதி பசு பாசங்களைச் சொல்லவந்த நூல்களாம்.

2. சிவமும். சக்தியும். ஆணவமும். அழகுடைத்தாய திரோதானமும். ஆன்மாவும் ஐந்தெழுத்தோரெழுத்தாகிய பிரணவத்தினுள்ளே அமைந்து நிற்கும்.

3. பிறவியை விளைக்கும் நகார மகாரங்களாகிய கூத்து ஒரு மருங்காகவும். வீட்டையுதவுஞ் சிகார வகாரங்களாகிய கூத்து ஒரு மருங்காகவும். யகாரமாகிய ஆன்மா இவ்விருவகைக் கூத்துக்கும் நடுப்பட்டதொன்றாகவும் இருத்தலை விசாரித்தறிவாயாக.

விரியமந மேவியவ்வை மீளவிடா சித்தம்
பெரியவினை தீரிற் பெறும். 4

மாலார் திரோத மலமுதலாய் மாறுமோ
மேலாகி மீளா விடின். 5

ஆராதி ஆதாரம் அந்தோ அதுமீண்டு
பாராது மேலோதும் பற்று. 6

சிவம்முதலே ஆமாறு சேருமேல் தீரும்
பவம்இதுநீ ஓதும் படி. 7

வாசி யருளியவை வாழ்விக்கும் மற்றதுவே
ஆசில் உருவமுமாம் அங்கு. 8

ஆசில்**நவா** நாப்பண் அடையா தருளினுல்
வாசியிடை நிற்கை வழக்கு. 9

---

4. மகார நகாரமாகிய மலமும் திரோதமும் மிகவும் இறுகப் புணர்ந்து யகாரமாகிய ஆன்மாவை அருளிலே திரும்பாதவண்ணஞ் செய்விக்கும். அவ்வான்மா பெரிய பிணியாகிய மலவிருளினின்றும் நீங்கின் சிகாரமாகிய சிவத்தினையடையும்.

5. மயக்கத்தினைப் பொருந்திய திரோதானமும் மலமுமாகிய நகாரமகாரம் இரண்டும் முதலாக உச்சரிக்கின் அவைகள் நீங்குமோ. இவற்றைக் கீழாக்கிச் சிவமாகிய சிகாரம் மேலாம் வண்ணம் மாறி உச்சரியாதொழியின்.

6. தமக்காதாரம் மாறுக வெண்ணியோ அவ்வாறு உச்சரித்தலால் வருந்தீங்கை மறுபடியும் விசாரியாமல் அந்தோ! நகாரமகாரங்களை மேலாக உச்சரிக்கும் விருப்பம்.

7. சிகார வகார மிரண்டினையும் முதலாக உச்சரிக்கின் பிறவித் துன்பம் நீங்கும். மோட்சத்தைக் காமுற்ற நீ உச்சரிக்கும் முறை இது.

8. அவ்வாறு உச்சரிக்கின், வகாரமாகிய அருள் சிகாரமாகிய சிவத்தில் யகாரமாகிய ஆன்மாவைத் தந்து பேரின்பத்திலே இருத்தும். அல்லாமலும், அவ்வருளே சிவத்திற்குக் குற்றமற்ற திருமேனியாயுமிருக்கும்.

9. குற்றந் தீர்ந்த திரோதானமும் அருளுமாகிய நகார வகாரங்கட்கு நடுவில் நில்லாமல் வகாரமாகிய அருளினுலே (யகாரமாகிய ஆன்மா) அவ்வருளாகிய வகாரத்திற்கும் சிவமாகிய சிகாரத்திற்கும் நடுவே ஞானமேயாய் நின்றழுந்துதல் முறைமை.

எல்லா வகையும் இயம்பும் இவனகன்று
நில்லா வகையை நினைந்து. 10

—உமாபதி சிவாசாரியார்

7. கொடிக்கவி

அஞ்செழுத்தும் எட்டெழுத்தும் ஆறெழுத்தும் நாலெழுத்தும்
பிஞ்செழுத்தும் மேலைப் பெருவெழுத்தும்—நெஞ்சழுத்திப்
பேசும் எழுத்துடனே பேசா எழுத்தினையும்
கூசாமற் காட்டக் கொடி. 1

—உமாபதி சிவாசாரியார்

8. நெஞ்சுவிடு தூது

அஞ்செழுத்தின் உள்ளீ டறிவித்தான் அஞ்செழுத்தை
நெஞ்சழுத்தி நேய மயலாக்கி—அஞ்செழுத்தை
உச்சரிக்குங் கேண்மை யுணர்த்திஅதன் உச்சரிப்பு
வைச்சிருக்கும் அந்த வழியாக்கி—அச்சமறச்
சென்று விளக்கை எழத் தூண்டி. (93-95) 1

—உமாபதி சிவாசாரியார்

---

10. இந்த ஆன்மா சிவசக்தியினை நீங்கி நில்லாது உடனுய் நிற்குந் திறத்தினைக் கருதி எல்லா உபாயங்களையும் நூல்கள் உரைக்கும்.

1. அஞ்செழுத்து - இங்கு, 'சிவாயநம' என்பது. எட்டெழுத்து – ஓம் ஹாம் ஹௌம் சிவாயநம. ஆறு எழுத்து - ஓம் சிவாய நம நாலெழுத்து - ஓம் சிவாய. பிஞ்செழுத்து - வ. பெருவெழுத்து - சி பேசும் எழுத்து - வ. பேசா எழுத்து - சி.

1. உள்ளீடு-(பதிபசுபாசம் அமைந்துள்ள) உள்ரகசியத்தை. நெஞ்சு அழுத்தி - மனத்தில் இருத்தி, நேயம் - அன்பு. மயல் - ஆசை. உச்சரிக்கும் - (தீட்சைபெற்றவர் சிகாரம் முதலாகவும், தீட்சை பெருதவர் நகாரமுதலாகவும்) செபிக்கும். கேண்மை - சம்பந்தம். அதில் - அந்த மகாமந்திரத்தில், உச்சரிப்பு - (நகரத்தில் திரோதானமும் மகரத்தில் மலமும் சிகரத்தில் சிவமும் வகரத்தில் அருளும் யகரத்தில் ஆன்மாவுமாக நின்ற உச்சரிப்பினை. சென்று - அதோமுகமாக நோக்கி.

உ

சிவசிவ

திருவைந்தெழுத்தின் பெருமை

வாயிலே வைக்கும் அளவின் மருந்தாகித்
தீய பிறவிநோய் தீர்க்குமே—தூயவே
கம்பெருமா தேவியொடு மன்னு கயிலாயத்(து)
எம்பெருமான் ஓரஞ் செழுத்து.

— கைலைபாதி காளத்திபாதி அந்தாதி

இருந்துநினைப் பார்தம் இருவினையை நீக்கும்
பொருந்துமிடி இம்மையிலே போக்கும்—மருந்தன்றே?
தம்பிரான் எவ்வுயிர்க்கும் தாணு அருணகிரி
எம்பிரான் ஓரஞ் செழுத்து.

—அருணகிரியந்தாதி

கருத்துறு மாயை இருளுக்குத்
தீபம்; கழிபிறவிப்
பெருத்தெழு நோவுக்(கு) அமிர்தசஞ்
சிவினி; பேதித்துள்ளம்
வருத்திடு துன்பத் திரைவா
ரிதிக்கு வடவை;மன்றத்து
அருத்தியின் ஆடுங் கருவைப்
பிரான்திரு வஞ்செழுத்தே.

—கருவைக்கலித்துறையந்தாதி

உ

செந்திலாண்டவன் துணை

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ பஞ்சாட்சர விளக்கம்

[சோளிங்கபுரம் சித்தாந்த சரபம் ஸ்ரீ சிவ. அருணசிவயோகி அவர்கள்]

யஜுர்வேத பஞ்ச ப்ரஹ்மோபநிஷத்

1. பஞ்சாக்ஷர மயம்சம்பும் பரம்ப்ரஹ்ம ஸ்வரூபிணம்
நகாராதி யகாராந்தம் ஜ்ஞாத்வா பஞ்சாக்ஷரம் ஜபேத்.

(இதன் பொருள்) பரப்ரஹ்ம ஸ்வரூபமாயுள்ள பஞ்சாட்சரத்தைத் தன் மயமாகக்கொண்டவர் சம்பு. பஞ்சாட்சரம் நகாரம் முதல் யகாரம் இறுதியாக உள்ளதென அறிந்து செபிக்கக் கடவர்.

அதர்வண வேத பஸ்ம ஜாபாலோபநிஷத்

2. ஓமித்யக்ரே வ்யாஹரேத் நமஇதி பச்சாத்
தச்சிவா யேத் யக்ஷர த்ரயம்.

3. பரமோ மந்த்ரஸ் தாரகோயம் பஞ்சாக்ஷர :-

4. வேதாவதம் ஸம்சைவம் பஞ்சாக்ஷரம் ஜபம்தஸ்
தாரகம் ஸப்ரணவம் மோதமாநாஸ் திஷ்டந்தி.

(இ-ள்). 2. ஓமென்று முதலில் சொல்லுக. நம என்று பின்னர். சிவாய என்னும் மூன்று அட்சரத்தை அதன் மேல்.

3. இதனினும் மேலான மஹா மந்திரமாய தாரக மந்திரமில்லை.

4. வேதங்களுக்குப் பேரணியாயுள்ள சைவ பஞ்சாட்சரமாகிய தாரக மஹாமந்திரத்தைப் பிரணவத்துடன் செபித்துக் கொண்டு சந்தோஷமடைகின்றார்கள்.

ஸ்ரீ ருத்ராத்யாயம் - நமகம்

5. நமச்சிவாயச சிவதராயச.

(இ - ள்.) சிவன்பொருட்டு நமஸ்காரம். மிகவும் அன்பு செய்கிறவன்பொருட்டு நமஸ்காரம்.

மேலே உதகரித்த சுருதிப் பிரமாணப்படி **நமச்சிவாய** என்பதுவே ஸ்ரீ பஞ்சாட்சரம். இது சைவர்கள் அனைவருக்கும் மூலதனமாயுள்ளது; வேதத்தின் இருதயத்தில் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது; மந்திரங்களெல்லாவற்றிற்கும் நாயக மாயும், தாயகமாயும் உள்ளது; சிவத்தை அறிவதற்கு முக்கிய ஆதாரமாயிருத்தலின் சிவ மூல மந்த்ரம் எனவும், சிவ வாசகம் எனவும் சொல்லப்படுகின்றது. இம்மந்திரத்தை எல்லா வருணத்தாரும் செபிக்கலாம். இது ஸ்ரீ காசியில் சிவபெரு மானால் உபதேசிக்கப்பட்டது. அப்பெருமானே இதற்குப் பரமாசாரியன். இதன் பொருளே பிரணவம்.

பஞ்சாட்சரம் ஆரியவேத இருதயம்

வேதமானது ருக், யஜுர், ஸாமம், அதர்வணம் என நான்கு திறப்படும். அவற்றுள் நான்காவதாகிய அதர்வண வேதம் மற்ற மூன்றனுள் அடங்கியிருத்தலால் வேதம் **மூன்றே (த்ரயீ)** என்று ஸ்மிருதிகள் கூறுகின்றன. அம்மூன்றனுள் நடுவிலுள்ளது யஜுர் வேதம். அவ்வேதம் பன்னிரண்டு காண்டங்களாகப் பிரிந்து எண்பத்திரண்டு ப்ரச்னங்களுடைய தாய் மாந்த்ரமெனவும். ப்ராஹ்மணமெனவும் இரு வேறு வகைப்பட்டு விளங்காநிற்கும். அவற்றுள் முதற்கண்ணுள்ள மாந்த்ரமே ஸம்ஹிதா பாகமெனப்படும். அப்பாகம் ஏழு காண்டங்களுடையது. அவற்றுள்ளும் நான்காவதாகிய நடுக் காண்டமே ஏழு ஸம்ஹிதைகளை யுடையது. அவ்வேழனுள்ளும் நான்காவதாகிய நடு ஸம்ஹிதையின் நடுவே, ஸ்ரீ ருத்ராத்யாயம் என்னும் சதருத்ரீயமாகிய மஹா மந்த்ர ஸமூகம் மிளிர் கின்றது. அந்தச் சதருத்ரீயத்தின் நடுவே **நமஸ்ஸோமாயச ருத்ராயச** என்னும் அநுவாகத்தில் **நமச்சிவாய** என்னும் ஸ்ரீ பஞ்

சாட்சரம் நாயகத்தன்மை பூண்டு பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது. அப்பஞ்சாட்சரத்தின் நாப்பண் **சிவ** என்னும் அட்சரத்வய பதம் வெள்ளிடை மலைபோல் விளங்குகின்றது. இதனாலே சிற்றறிவும், சிறுதொழிலும், சின்னாளும், பல பிணியோடுங்கூடிய உயிர்களுக்கு இச்சிவ நாம ஸ்மரணையின் மிக்கது வேறொன்றுமில்லையென்பது தேற்றம்.

தமிழ் வேதமும், "வேத நான்கினும் மெய்ப்பொருளாவது நாத நாம நமச்சி வாயவே" எனவும், "அருமறையின் அகத்தானே" எனவும் முழக்கியது,

திருமூலதேவரும் தமது **திருமந்திரத்தில்,**

"பழுத்தன வைந்தும் பழமறை யுள்ளே" என்றனர். இதனாலே வேதமாகிய மரத்தின் உச்சியில் பழுத்த பழமும் ஸ்ரீ பஞ்சாட்சரமேயாம்; சமயாதீதப் பழமுமிதுவே.

பஞ்சாட்சரம் தமிழ்வேத ஹ்ருதயம்

தமிழ் வேதமானது திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் தேவாரம் (திருக்கடைக்காப்பு), திருநாவுக்கரசுமூர்த்தி சுவாமிகள் தேவாரம் (தேவாரம்), சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் (திருப்பாட்டு), மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகம் என நான்கு வகைப்படும். முதல் மூன்றனுள் நான்காவதாகிய மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகம் அந்தர்க்கதம். ஆதலால் வேதம் (தேவாரம் - மூவர் சொல்லுந் தமிழ்) - **மூன்றே**யாகும். அம்மூன்றனுள் நடுவிலுள்ளது திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம். அது மூன்று திருமுறைகளாக வகுக்கப்பட்டுள்ளது. அவையாவன நான்கு, ஐந்து, ஆறு திருமுறைகள். அவற்றுள் நடுவிலுள்ளது ஐந்தாவது திருமுறை. அத்திருமுறை நூறு திருப்பதிகங்களையுடையது. அவற்றுள் நடுவிலுள்ளது திருப்பாலைத்துறைத் திருப்பதிகம். அது பதினொரு திருப்பாக்களையுடையது. அவற்றுள் நடுவிலுள்ளது ஆறாவது திருப்பா. அதன் நடுவே, "**விண்ணினர் பணிந்தேத்த**" என்னுந் திருப்பாவின் மத்தியில் **சிவாய** என்னும் முத்தி பஞ்சாட்சரம்

பிரகாசித்தொளிர்கின்றது. இதனாலே, திராவிட வேதத்தின் நாப்பணும் சிவநாமமே மிளிர்கின்றமையால் ஆரிய வேதமே தமிழ் வேதமெனப்படும். திருமறைக்காட்டில் ஆரிய வேதம் பிணித்திருந்த திருக்கதவைத் தமிழ் வேதம் திறந்ததே இரண்டு வேதமும் ஒன்றென்பதற்குப் போதுமான மேற்கோளாம்.

பஞ்சாட்சரத்திலுள்ள சிவநாமத்தால் ஆரியவேதம் முழுமையும் விளக்கமுறல்

பஞ்சாட்சரத்திலுள்ள சிவ சப்தத்தால் ஸ்ரீ பஞ்சாட்சரமும், ஸ்ரீ பஞ்சாட்சரத்தால் ஸ்ரீ ருத்ராத்யாயமும், ஸ்ரீ ருத்ராத்யாயத்தால் நடு ஸம்ஹிதையும், நடு ஸம்ஹிதையால் நடுக்காண்டமும், நடுக்காண்டத்தால் ஏழு காண்டங்களும், ஏழு காண்டங்களால் ஏனைய பகுதியுடன் கூடிய யஜுர்வேதமும், யஜுர்வேதத்தால் ருக், ஸாமம் என்னும் மற்றிரு வேதங்களும் விளக்கமுறுகின்றன. இதனாலே வேத முழுமையும் சிவமணம் வீசிக்கொண்டிருக்கின்றதென்பது வெளிப்படை. இவ்வுண்மையை,

திருவாசகம்

"பரவுவார் இமையோர்கள் பாடுவன நால்வேதம்" என்று உண்மை நிறுவியது.

ப்ருஹஜ்ஜாபாலோபநிஷத்

" திக்வித்யாமசிவாச்ரயாம் "

(சிவனை ஆச்ரயிக்காத சாஸ்திரங்களை நெருப்பிலிடு) என்று உபதேசித்தது.

பஞ்சாட்சரத்திலுள்ள சிவபதமே வேதபுருஷனுக்குக் கண்மணி

வேதபுருஷராகிய சிவபெருமானுக்கு யஜுர் வேதம் சிரசாகவும், அவ்வேத மத்தியிலுள்ள ருத்ராத்யாயம் முகமாகவும், அதன் நடுவிலுள்ள ஸ்ரீ பஞ்சாட்சரம் கண்களாகவும்,

அதனிடையிலுள்ள **சிவ** என்னும் அட்சரத்வயங்கள் கண்மணிகளாகவும் துலங்கா நிற்கும். இக்கருத்தையே உபப்ரஹ்மணமும் முடித்துக் கூறியது. இதனல் இவ்விரு அட்சரமாகிய **சிவ** நாமத்தை வாக்கினல் ஒருமுறை உச்சரிக்கின் அது விரைந்து பாவங்களையெல்லாம் நாசமாக்கும் என்றும் அதுவே மீளவும் வற்புறுத்தியது. "சண்டாளனுயினும் சிவ என்னும் மொழியைச் செப்புவானுயின் அவனெடு பேசுக; அவனெடு வசிக்க; அவனெடருகிருந்துண்ணுக" என்றது **முண்டகோப சாகை** இதுவே பரப்ரஹ்மத்துக்கு இடுகுறிப் பெயர். மாண்டூக்கியம் ந்ருஸிம்ஹம், தர்சனம் முதலிய உபநிஷத்துக்களிலெல்லாம் இந்தச் **சிவ** என்ற சொல்லே துரீய ஸ்தானத்தில் பரப்ரஹ்ம சொல்லாகக் குறிக்கப்பட்டுள்ளது.

பஞ்சாட்சரத்திலுள்ள சிவ நாமமே மிகவும் உத்கிருஷ்டம்

பதினெட்டு வித்தைகளுக்கும் சுருதி மேலானது. அச்சுருதியிலுள்ளும் ருத்ரைகாதசனியே நனிசிறந்தது. அதனிலும் ஸ்ரீ பஞ்சாட்சரமே மேலானது. அதனுள்ளும் **சிவ** என்னும் ஈரெழுத்தே மிகவும் உத்கிருஷ்டமானது என்று வேதோபப்ரஹ்மணங்கள் ஒரே முடிவாய் எடுத்திசைத்தன.

பஞ்சாட்சரமே எல்லாவற்றிற்கும் பிரேரக நிலை ஆதாரம்

இம்மந்திரத்திலுள்ள திருவைந்தெழுத்துக்களே பிருதிவி, அப்பு தேயு, வாயு, ஆகாசம் என்னும் **பூதங்களைந்தையும்**; சுரோத்திரம், த்வக்கு, சக்ஷு, ஜிங்வை, ஆக்ராணம் என்னும் **ஞானேந்திரியங்களைந்தையும்**; வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபஸ்தம் என்னுங் **கர்மேந்திரியங்களைந்தையும்**; சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்னுந் **தன்மாத்திரைகளைந்தையும்**; மனம், அகங்காரம், புத்தி, சித்தம், உள்ளம் என்னும் **அந்தக்கரண பஞ்சகத்தையும்**; நிவிர்த்தி, பிரதிஷ்டை, வித்தை, சாந்தி, சாந்தியதீதை என்னும் **கலைகளைந்தையும்**; கர்மசாதாக்கியம், கர்த்துரு சாதாக்கியம், மூர்த்தி சாதாக்கியம், அமூர்த்தி சாதாக்கியம், சிவ சாதாக்கியம் என்னும் **சாதாக்கியங்களைந்தையும்**; கிரியாசக்தி, ஞானசக்தி, இச்சாசக்தி, ஆதிசக்தி,

பராசக்தி என்னும் **சக்திகளைந்தையும்**; ஸத்தியோஜாதம், வாமதேவம், அகோரம், தத்புருஷம், ஈசானம் என்னும் **பஞ்சப்ரஹ்மங்களையும்**; பிரமன், விஷ்ணு, ருத்ரன், மஹேச்வரன், சதாசிவன் என்னும் **பஞ்சகர்த்தாக்களையும்**; ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம், திரோபவம், அநுக்கிரஹம் என்னும் **பஞ்சகிருத்தியங்களையும்**; அகாரம், உகாரம், மகாரம், நாதம், விந்து என்னும் **பஞ்சவர்ணங்களையும்**, வல்லூறு, ஆந்தை, காகம், கோழி, மயில் என்னும் **பஞ்ச பட்சிகளையும்** தமக்குள் குறிப்பாயுணர்த்திக் கொண்டிருக்கின்றன. அன்றியும், சொற்கூற்றுப் பிரபஞ்சம், பொருட் கூற்றுப் பிரபஞ்சம் ஆகிய இவ்விரண்டிலுள்ள எல்லாவற்றிற்கும் இவைகளே பேராதாரமாய் விளங்கிக் கொண்டுள்ளன. இதற்குப் பிரமாணம் :—

உண்மை விளக்கம்

அஞ்செழுத்தே ஆகமமும் அண்ணல் அருமறையும்
அஞ்செழுத்தே ஆதிபுராணம் அனைத்தும்—அஞ்செழுத்தே
ஆனந்தத் தாண்டவமும் யாவைக்கும் அப்பாலாம்
மோனந்த மாமுத்தி யும்.

திருமந்திரம்

அஞ்செழுத் தாலைந்து பூதம் படைத்தனன்
அஞ்செழுத் தாற்பல யோனி படைத்தனன்
அஞ்செழுத் தாலிவ் வகலிடந் தாங்கினன்
அஞ்செழுத் தாலே அமர்ந்து நின்றானே.

ஐம்ப தெழுத்தே யனைத்தும் வேதங்களும்
ஐம்ப தெழுத்தே யனைத்தா கமங்களும்
ஐம்ப தெழுத்தே யுமாவ தறிந்தபின்
ஐம்ப தெழுத்தும்போ யஞ்செழுத் தாமே.

பஞ்சாட்சரமே பலவகைச்சித்தியின் பொருட்டுப் பலபேதம் ஆதல்

பஞ்சாட்சரமந்திரமே ' பிறப்பென்னும் பெருவியாதியினின்றும் நீங்கிப் பேரானந்தப் பெருநிலையை யடைவதற்குச்

சிறந்த சாதனமாயிருப்பதோடு அவரவர் விருப்பத்தின்படி எழுத்துக்கள் மாறுதலால் ஸ்தம்பனம், மோஹனம், வசியம், ஆக்ருஷணம், உச்சாடனம், வித்வேஷணம், பேதனம், மாரணம் என்னும் **அஷ்டகர்ம வித்தை** முதலிய சித்திகளையுங் கொடுக்கின்றது. மேலும், அதுவே ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமம், ஸத்யோஜாதம் என்னும் பஞ்ச ப்ரஹ்ம மந்திரங்களாகி, அவை ஒவ்வொன்றும் இருபத்தைந்தாக நூற்றிருபத்தைந்து பஞ்சாட்சர மந்திரங்களாய் விரிந்துள்ளன. அவற்றை விரிக்கின், **ஈசானமாகிய நகாரத்தில்** உச்சாடனத்துக்கு உபயோகமான அகோர பஞ்சாட்சர முதல் பரகாயப் பிரவேசத்தைப் பயக்க வல்ல ஸர்வ பஞ்சாட்சரம் இறுதியாக இருபத்தைந்து பஞ்சாட்சரமும், **தத்புருஷமாகிய மகாரத்தில்** வித்வேஷணத்தைத் தரவல்ல வித்வேஷண பஞ்சாட்சரமுதல் யட்சணிகளைப் புரிய வல்ல யட்சணி பஞ்சாட்சரம் இறுதியாக இருபத்தைந்து பஞ்சாட்ரமும், **அகோரமாகிய சிகாரத்தில்** ஸ்தம்பனஞ் செய்யவல்ல ஸ்தம்பன பஞ்சாட்சரமுதல் இந்திரனை அழைப்பிக்கவல்ல அகண்ட பஞ்சாட்சரம் இறுதியாக இருபத்தைந்து பஞ்சாட்சரமும், **வாமமாகிய வகாரத்தில்** வீக்கத்தையுண்டாக்க வல்ல பேத பஞ்சாட்சரமுதல் ஸர்வ பாஷைகளையும் அறியவல்ல ஸர்வபரிபாஷா பஞ்சாட்சரம் இறுதியாக இருபத்தைந்து பஞ்சாட்சரமும், **ஸத்யோஜாதமாகிய யகாரத்தில்** மூலாதாரத்தைத் தரிசிப்பிக்கவல்ல மூலாதார பஞ்சாட்சரமுதல் சதுஷ்பீடத்தைத் தரிசிக்கவல்ல சதுஷ்பீட பஞ்சாட்சரம் இறுதியாக இருபத்தைந்து பஞ்சாட்சரமும் ஆகிய திருவட்சரங்கள் ஐந்தினின்றும் [1]**நூற்றிருபத்தைந்து பஞ்சாட்சரங்கள்** உண்டாகி ஆத்மாக்களுக்கு வேண்டிய பேற்றை அளித்துக்கொண்டிருக்கின்றன. இவற்றின் விரிவெல்லாம் **ருத்ரயாமளம், ஆமநாயம்** முதலிய நூல்களுள் பரந்து கிடக்கின்றன. சிற்பரச்செல்வர்களாகிய சிவஞானிகளுக்கு மேற்சொன்ன சித்திகள் யாவும் தாமே ஏவல் செய்யும். அவர்கள் அவற்றைக் கற்கவேண்டிய அவசியமில்லை. அவைகள் தாமே வந்து பொருந்தும்.

---

1 இதனை இறுதியில் அமைந்துள்ள 'அஷ்டசித்தி அளிக்கவல்ல பஞ்சாட்சரம்' என்ற பகுதியில் காண்க.

பஞ்சாட்சரமும் பிரணவமும் அபேதமெனல்

பஞ்சாட்சரம் பிரணவத்துக்கு அகத்துறுப்பாயும், உள்ளொளியாயுமிருத்தலினலே பல்வகைச் சித்தியின்பொருட்டுத் தொகை ஏறியுங் குறைந்தும் வரும். அப்போது அதனேடு பீஜங்களும், பதங்களும் சேர்ந்து வரும். அங்ஙனஞ் சேர்ந்து பலவகையாய்ப் பேதப்பட்டு வரினும் அவை யாவும் ஸ்ரீ பஞ்சாட்சரமேயாம். எட்டெழுத்தும், ஆறெழுத்தும், நாலெழுத்தும், பிஞ்செழுத்தும், மேலைப்பெருவெழுத்தும், பேசுமெழுத்தும், பேசாவெழுத்தும் ஆகிய இவை யாவும் பஞ்சாட்சரமென்றே கூறப்படும். பஞ்சாட்சரமே பிரணவப் பொருளாய் விளங்குதலானும், பிரணவமே பஞ்சாட்சரமாயிருத்தலானும் இரண்டும் தம்மில் பேதமில்லாத தனி மந்திரங்களாம். ஆதலால் பஞ்சாட்சரத்தின் முதலில் பிரணவமிருக்கவேண்டியதவசியமில்லை. பிரணவம் வேறு துணை வேண்டாது உச்சரிக்கப்படுவதுபோல் பஞ்சாட்சரமும் வேறொன்றின் ஆச்ரயமின்றித் தானே தனித்தியங்கிப் பயன்தரும். ஆகையினலே அவையிரண்டும் தனி மந்திரங்களாம். சில சந்தர்ப்பங்களில் பிரணவத்தைப் பஞ்சாட்சரத்தோடு சேர்த்து உச்சரிப்பதுமுண்டு. அப்படி உச்சரிப்பதால் வரும் இழுக்கு ஏதுமில்லை. சாரைப்பாம்பு என்று சொன்னபோது சாரையாகிய பாம்பு என்று பொருள்படுவதுபோல் **ஓம் நமச்சிவாய** என்று உச்சரிக்கும்போது ஓங்காரமாகிய நமச்சிவாய என்றே பொருள் கொள்க. இதற்குப் பிரமாணம் :—

திருமந்திரம்

நகார மகாரஞ் சிகார நடுவாய்
வகார மிரண்டும் வளியுடன் கூட்டி
ஓசார முதற்கொண் டொருக்கா லுரைக்க
மகார முதல்வன் மனத்தகத் தானே.

உண்மை விளக்கம்

ஓங்கார மேநல் திருவாசி உற்றதனில்
நீங்கா எழுத்தே நிறைசுடராம்.

தாயுமான சுவாமிகள்

ஓங்கார மாமைந் தெழுத்தாற் புவனத்தை உண்டுபண்ணிப்
பாங்காய் நடத்தும் பொருளே அகண்ட பரசிவமே.

இந்நூலின் உபக்கிரமத்தில் உதஹரித்த (2), (4) வேத வாக்கியங்களும் பஞ்சாட்சரத்தைப் பிரணவத்தோடு உச்சரிப்பதற்குப் போதிய சான்றும்.

பிரணவமே பஞ்சாட்சரம்

ஓம் என்பதே பிரணவம். அது சமஷ்டிப் பிரணவமெனவும். வியஷ்டிப் பிரணவமெனவும் இருவகைப்படும். **சமஷ்டிப் பிரணவம்** தொகுத்துக் கூறுவது. அது **ஓம்** என்பதாம். **வியஷ்டிப் பிரணவம்** வகுத்துக் கூறுவது. அது **அ, உ, ம,** என்பதாம். இந்த வியஷ்டிப் பிரணவமாகிய அகார உகார மகார மூன்றும முறையே ஸத்வ ரஜ தமோ குணங்களையும், பிரமவிஷ்ணு ருத்ரர்களையும், கார்ஹபத்திய தக்ஷிண ஆஹவநீயாக்னிகளையும், ருக் யஜுர் ஸாமவேதங்களையும், பூமி அந்தரிக்ஷம் ஸவர்க்கலோகங்களையும், வசுக்கள் ருத்ரர்கள் ஆதித்யர்கள் என்ற பிதுர்க்களையும், காயத்ரீ திருஷ்டுப் ஜகதீ என்ற சந்தங்களையும், பூ: புவ ஸுவ: என்ற வ்யாஹிருதிகளையும் பொருளாகக் கொண்டுள்ளன. **அகாரம்** வாய்திறத்தலினாலேயே ஸ்ருஷ்டியையும், **உகாரம்** இதழ் குவித்தலினாலேயே ஸ்திதியையும், **மகாரம்** வாய் மூடுதலினாலேயே ஸம்ஹாரத்தையும் குறிப்பிக்கின்றமையால் சொல் பொருளென்னும் இருவகைப் பிரபஞ்சங்களும் இந்தப் பிரணவத்திலே தோன்றி நின்று ஒடுங்குமென்றறிக. ஆயின், ஓம் என்னும் சமஷ்டிப் பிரணவம் எதைக் குறிக்குமெனின், மேற்சொன்ன அகார உகார மகாரம் என்னும் பாதங்கள் (அம்சங்கள்) மூன்றுமாத்திரையைக் குறிக்க, நான்காவதாயுள்ள இந்த ஓங்காரமென்னும் பாதம் **அர்த்த மாத்திரை**யாகும். அது மிக ஸூக்ஷ்மமான நாதரூபம். அதற்கு அதிதேவதை துரீயமூர்த்தியான உமையுடன்கூடிய **பரமசிவம்**. அம்மூர்த்தியையே உத்தமோத்தம புருஷனென்று வேதங்கூறும். அந்த அர்த்தமாத்திரை ஷாட்குணங்களையும், ஆதர்வர்ணிகளின் அக்கினியையும், அதர்வண வேதத்தையும்,

ஸோமலோகத்தையும், மருத்துக்களை (கணதேவதைகளை)யும், விராட் என்னும் சந்தத்தையும் பொருளாகக் கொண்டுள்ளது. இவற்றால் பிரணவத்தின் நான்கு பாதங்களும், சதுர்த்த ப்ரஹ்மமும் விளக்கப்பட்டன.

அதர்வணவேத ந்ருஸிம்ஹ தாபங்யோபநிஷத்

அகாரம் ப்ரஹ்மாணம் நாபௌ
உகாரம் விஷ்ணும ஹ்ருதயே
மகாரங் ருத்ரம் ப்ரூமத்யே ஓங்காரம்
ஸர்வேச்வரம் த்வாத சாந்தே.

இவ்வாசகம் அகாரம் பிரமனுக்கும், உகாரம் விஷ்ணுவுக்கும், மகாரம் உருத்திரனுக்கும், ஓங்காரம் ஸர்வேச்வரராகிய திரிமூர்த்திபரருக்கும் உரியனவென்றும், அவர்கள் முறையே நாபியிலும், இருதயத்திலும், புருவமத்தியிலும், துவாதசாந்தத்திலும் வீற்றிருக்கின்றார்களென்றும் தெரிவிக்கின்றது. இதனால் கிருத்திய கர்த்தாக்களாகிய பிரமன், விஷ்ணு, ருத்ரர்கள் அகார உகார மகாரங்களில் வசிக்கின்றவர்களேயன்றி அவர்கள் ஒருவருக்காவது அவ்வட்சரங்கள் உரியனவல்ல. அவ்வட்சரங்களுக்கும் அவற்றையுடைய ஓங்காரத்துக்கும் உரியவர் சதுர்த்தவாச்சியராகிய சிவபெருமானே யாவர். ஆதலால் ஓங்காரமாகிய பிரணவம் மும்மூர்த்திகளுக்குப் பிறப்பிடமாயும், மூர்த்தித்திரயாதீத பரப்ரஹ்மத்துக்கு இருப்பிடமாயும் உள்ளது. அவ்வாறுள்ள ஏகாட்சரமாகிய ஓங்காரமே மூன்றெழுத்தாயும், அம்மூன்றுங்கூடி ஓம் என்று எழுதும்போது விந்துவாயும், ஓம் என்று உச்சரிக்கும்போது நாதமாயும் விரிதலால் முதல்மூன்றெழுத்தும், இந்த விந்து நாதங்களாகிய வரிவடிவும் ஒலிவடிவுங்கூடி ஐந்தெழுத்து ஆயிற்றென்பது வெளிப்படை.

காமிகாகமம்

"ப்ரதமம் தாரசாகாரம் த்விதீயம் தண்டமுச்யதே
த்ருதீயம் குண்டலாகாரம் சதுர்த்தம் ஹ்யர்த்தசந்த்ரகம்
பஞ்சமம் பிந்துஸம்யுக்தம் ப்ரணவம் பஞ்சலட்சணம்"

என்ற வாக்கியத்தின்படி முதலாவது நட்சத்திராகாரமும், இரண்டாவது தண்டாகாரமும், மூன்றாவது குண்டலவடிவும்,

நான்காவது அர்த்த சந்திரவடிவும், ஐந்தாவது பிந்துவோடி யைந்த வடிவும் ஆகிய ஐந்து உறுப்புக்களுடைமையின் பிரண வமும் ஐந்து கலைகளையுடையதாயிற்று. இவ்வைங்கலைகளுள் **நட்சத்திரவடிவம் நகாரம்** எனவும், **தண்ட வடிவம் மகாரம்** எனவும், **குண்டல வடிவம் சிகாரம்** எனவும், **பிறைவடிவம் வகாரம்** எனவும், **வட்ட வடிவம் யகாரம்** எனவுஞ் சொல்லப்படும். இதனாலும் பிரணவமே பஞ்சாட்சரமாயிற்று.

மேலும், ருக்வேத முதன் மந்திரத்து **முதல் அட்சரம்** அகாரமாயும், மத்திய மந்திரத்து **மத்திய அட்சரம்** உகாரமாயும், இறுதி மந்திரத்து **இறுதி அட்சரம்** மகாரமாயும் போந்தமையின் ருக்வேத முழுமையும் பிரணவ சொரூபமாயிற்று. இந்தப் பிரணவத்தை விளக்கவே, இரண்டாவதாகிய யஜுர் வேத மெழுந்து முதலிலும் இறுதியிலும் பிரணவத்தைக் கூறி இடை யில் பஞ்சாட்சரத்தை ஓதிப் பொலிவெய்தியது. அவ்வாறே தமிழ் வேதமும் நடுவில் முத்தி பஞ்சாட்சரத்தை அமைத்துக் கொண்டு பிரகாசித்தொளிர்கின்றது. இவற்றாலும் பிரணவமே பஞ்சாட்சரமாயினவாறறிக. பிரணவத்துக்கும் பஞ்சாட்சரத் துக்குமுள்ள அநந்நியத்துவத்தை ஓர் உபமான வாயிலாகவும் விளக்குதும்: நெல்லுக்கு அரிசி எப்படி உள்ளீடோ அது போலப் பிரணவத்திற்குப் பஞ்சாட்சரம் உட்கிடையாம். நெல் லினது பலன் அரிசியாவதுபோல் பிரணவத்தின்பலன் ஸ்ரீ பஞ் சாட்சரமேயாம். அரிசியாலடையப் பெறுவது அன்னம். பஞ்சாட்ரத்தால் அடையப்பெறுவது அத்வைதஞானம். அன்னத்தால் கிடைப்பது பசியின்மை, திருப்தி, இன்பம். அத்வைதஞானத்தால் கிடைப்பது மும்மல நீக்கமும், சிவ பூரணநிறைவும் (அதாவது ஆன்மாவினிடத்து அருள்விளக்க மென்னும் பரவெளி மேலிடலும்), அத்வைதானந்த முத்தி யுமாம்.

தத்துவமசியும், பிரணவமும் பஞ்சாட்சரமும் ஒரே பொருளைக் குறிக்கும் வாக்கியங்கள்

ஸாமவேத ஸாரமாகிய சாந்தோக்கிய உபநிஷத்தின் கண் ணுள்ள **தத்துவமசி** என்னும் மஹாவாக்கியத்துக்குப் பொருள்

தத் பரமாத்மாவாகிய ப்ரஹமத்துக்கும், **த்வம்** ஜீவாத்மாவாகிய உயிருக்கும், **அசி** அருட்சத்தி வாயிலாக ஐக்கியமென்று சொல்லப்படுகிறது. அவ்வாறே பிரணவத்துக்கும் அகாரமாகிய சிவத்துக்கும் **மகார**மாகிய சீவனுச்கும், **உகார**மாகிய அருள்வாயிலாக ஐக்கியம் என்று பொருள்படுகின்றது. அன்றியும், பஞ்சாட்சரத்திலும் **சிவ** பரமாத்மாவாகிய சிவத்துச்கும், **நம** சீவாத்மாவாகிய பசுவுக்கும், **ஆய** அருட்சத்தி வாயிலாக ஐக்கியமுண்டாமென்று அர்த்தம் பிரகாசிக்கின்றது. இவைகளே வேதோக்தமான வியாக்கியானம். இதனாலே மஹா வாக்கியமாகிய **தத்துவமசியும்**, ஓங்காரமாகிய **பிரணவமும்**, திருவைந்தெழுத்தாகிய **பஞ்சாட்சரமும்** ஒரே பொருளை விளக்கவெழுந்தன வென்பதாம். இவ்வுண்மை யறியாத சிலர் ஸம்ஸ்கிருதத்தை உயர்த்தியும் தமிழைத் தாழ்த்தியும் பேசுவதுபோல் பிரணவத்தை உயர்வாகவும் பஞ்சாட்சரத்தைத் தாழ்வாகவும் கூறுநிற்பர். இது அறியாமையேயாம். பண்டைய தீவினைப் பயனுமாம்.

*பஞ்சாட்சர வகைகள்

திருவைந் தெழுத்துக்களைக் கொண்ட ஸ்ரீ பஞ்சாட்சரமாகிய மஹா மந்திரம் சாதக அதிகாரிகளின் பக்குவ தாரதம்மியத்துக்குத் தக்கவாறு ஓதுமுறையில் ஐந்துவகையாகக் கூறப்பட்டுள்ளது. அவை ஸ்தூலம், ஸூட்சமம், காரணம், மஹா காரணம், மஹா மநு என்பனவாம். அவையாவன:

1.	ஸ்தூல பஞ்சாட்சரம்	ந ம சி வா ய
2.	ஸூட்சம பஞ்சாட்சரம்	சி வா ய ந ம
3.	காரண பஞ்சாட்ரம்	சிவாயசிவ
4.	மஹா காரண பஞ்சாட்சரம்	சிவ
5.	மஹா மனு	சி.

* பஞ்சாட்சரங்கள் தூல, சூட்சம, காரணம் என்ற மூன்றே. மற்ற மஹாகாரணம், மஹா மனு என்பன ஏகான்ம வாதிகள் முடிபு பற்றி நுழைந்தனவாகும். "முத்தியினும் மூன்று முதலும் மொழிய" என்ற சித்தாந்த மரபு ஆன்மா அழியக்கொள்ளும் கொள்கையை ஏலாது. அன்றியும் யகாரமாகிய ஆன்மா இல்வழி உணர்வானின்றிச் சிவத்தை யுணர்ந்து ஓதுஞ் செயல் நிகழாது. மற்றும் மஹா மனுவில் அருளையின்

ஸ்தூல பஞ்சாட்சர விளக்கம்

நமசிவாய என்னும் ஸ்தூல பஞ்சாட்சரம் **ந**காரத்தை முதலிலும் **ய**காரத்தை இறுதியிலும் வைத்தோதுவது. அது போதகாசாரியராலும் ஸாதகாசாரியராலும் உபதேசிக்கப் படுவது; இம்மைப்பயனும் மறுமைப்பயனும் பயப்பது; எல்லா வருணத்தாராலும், அதீட்சிதராலும் ஆச்ரயிக்கத் தக்கது. இதில் முதல் நின்ற **ந**கார **ம**காரங்கள் பாசத்தையும், இடைநின்ற சிகார வகாரங்கள் பதியையும், கடைநின்ற **ய**காரம் பசுவையும் தெரிக்கா நிற்கும். இதனால் பாசமாகிய அசித்தையும், பசுவாகிய சித்தையும் இயக்குகின்றவன் பதி எனவும், அப்பதி இவ்விரண்டையும் உருவமாகக் கொண் டிருப்பதால் **விசுவசொரூபி** எனவும், இவ்விரண்டும் தொழிற் படத்தான் ஏதுவாய் நிற்றலால் **விசுவகாரணன்** எனவும், இவற் றிற்கு உடனாய் நிற்றலால் **விசுவாந்தர்யாமி** எனவும், இவற்றைக் கடந்து விளங்கலால் **விசுவாதீதன்** எனவும், இவற்றால் சேவிக்கப் படலால் **விசுவஸேவ்யன்** எனவும் போற்றப்படுகின்றனன். இம் மந்திரத்தைக் கிரமமாக ஓதிவரின் பல்வகைப்பட்ட துன்பங் களும் நிவிர்த்தியாவதோடு சித்த சுத்தியும், மலபரிபாகமும், சிவஞானமும் உண்டாகும். இதன் மஹிமைகளையெல்லாம் இந்நூலின் முற்பகுதியில் காட்டியுள்ள தேவாரத் திருப்பதிகங் களாலோர்க. ஆளுடைய பிள்ளையார் இருபதிகங்களாலும், ஆளுடைய அரசும், ஆளுடைய நம்பியும் ஒவ்வோர் பதிகங் களாலும் தனித்தெடுத்தோதியுள்ளார்கள். ஆளுடைய வடி களோ தம்முடைய மணிவாசகத்து முன்வைத்தோதியருளி னர். அன்றியும், நாவரசராகிய பெருந்தகையாரும் தம்மைச் சமண மாக்கள் பழிபாவத்துக் கஞ்சாது நீற்றறையிலிட்ட போழ்து இம்மந்திரத்தைச் சொல்லியே யாதோர் இடையூறு மில்லாமல் விளங்கினர்.

றிச் சிவமும், சிவத்தையின்றி அருளும் இல்லாதபோது அருட்சத்திக்குத் தோற்றம் ஒடுக்கம் கூறுதல் ஆகாது. அங்ஙனம் கூறின் "அருளுண்டாம் ஈசற்கு" என்ற சிவஞான போத வெண்பாவோடு முரணும். ஆகவே மஹா காரணம், மஹாமனு என்ற ஈரெத்து ஓரெழுத்துக்கள் ஐந்தெழுத் துக்களாகா என ஏற்ற இயைபு காட்டி மறுப்பாரும் உண்டு.

ஐந்தாம் திருமுறை

நமச்சி வாயவே ஞானமும் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நாநவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே.

திருவாசகம்

" போற்றியோ நமச்சிவாய புயங்கனே மயங்கு கின்றேன்
போற்றியோ நமச்சிவாய புகலிடம் பிறிதொன் றில்லை
போற்றியோ நமச்சிவாய புறமெனப் போக்கல் கண்டாய்
போற்றியோ நமச்சிவாய சயசய போற்றி போற்றி "

என்றது.

சூக்கும பஞ்சாட்சர விளக்கம்

சிவாயநம என்னும் ஸூக்ஷ்ம பஞ்சாட்சரம் **சிகாரவகாரங்**களை முதலிலும், **யகாரத்தை** இடையிலும், **நகாரமகாரங்களை** இறுதியிலும் வைத்தோதுவது. இது ஸ்தூல பஞ்சாட்சரத்தை நியமமாக அநுஷ்டித்துத் தீட்சைபெற்ற பரிபாகிக்கு முக்தியின் பொருட்டு உபதேசிக்கப்படுவது. இவ்வைந் தெழுத்துக்களுள் முதற்கண்ணுள்ள **சிகாரம்** சிவத்தையும், இரண்டாவதாய **வகாரம்** அருட்சத்தியையும், மூன்றுவதாய **யகாரம்** ஆன்மாவையும், நான்காவதாகிய **நகாரம்** திரோதானத்தையும், ஐந்தாவதாய **மகாரம்** ஆணவ மலத்தையும் உணர்த்துவனவாம். சிகார வகாரங்கள் **பதியையும்**, யகாரம் **பசுவையும்**, நகார மகாரங்கள் **பாசத்தையும்** விளக்குவனவாம்.

உண்மை விளக்கம்

சிவனருள் ஆவி திரோதமலம் ஐந்தும்
அவனெழுத் தஞ்சின் அடைவாம்.

ஈசனருள் ஆவி யெழிலார் திரோதமலம்
ஆசிலெழுத்(து) அஞ்சினடை வாம்.

திருமந்திரம்

சிவனரு ளாய சிவன்திரு நாமம்
சிவனரு ளான்மா திரோத மலமாயை.

சிவன்சத்தி தன்னுடன் சீவனர் சேர
அவஞ்சேரத்த பாசம் அணுக கிலாவே.

திருவருட்பயன்

ஊன நடனம் ஒருபால் ஒருபாலாம்
ஞானநடந் தான்நடுவே நாடு.

இம்மந்திரத்தின் நடுவில் **யகாரமாகிய ஆன்மாவை** நிற்கும்படி வைத்ததின் பரமரகஸியம் யாதெனின்? அவ்வான்மா சத்தாகிய சிவத்தின் தன்மையையும், அசத்தாகிய பாசத்தின் தன்மையையும் அறிகின்ற அவற்றின் வேறுயதோர் தன்மையுடையதெனவும், அவ்விரண்டின் வியஞ்சகமுள்வழி விளங்குவதோர் முறைமையுடையதெனவும், அவ்விரண்டின்பாலும் சார்ந்ததின் வண்ணமாயமுந்திச் சதசத்தென்னும் பேர்பெற்று நிற்குமியல்பினை யுடையதெனவும் விளக்குதற்பொருட்டே. இதனால் ஆன்மா சத்துமன்று அசத்துமன்று; அவற்றின் வேறுயதோர் சதசத்துப்பொருளாம். ஆகையினுலே ஆன்மா எக்காலத்தும் திருவருளைத் துணையாகக் கொண்டே பிறவிக் கடலை நீந்திப் பேரின்பத்தை அநுபவிக்க வேண்டியிருக்கின்ருன். **சிவாய** என்ற பதத்தில் சேர்த்துப் படிக்கப் பட்டிருத்தற்குங் காரணமிதுவே. இந்த சூக்கும பஞ்சாட்சரத்துக்கே **ஒருதலை மாணிக்கம்** என்றும், **முத்தி பஞ்சாட்சரம்** என்றும் பெயர். இம்மந்திரத்தில் சிவம், அருள், ஆன்மா, திரோதை, மலம் என ஐந்தும் முறையே நிற்றலால் வீடுபேற்றை விரும்புவோர் **நமசிவாய** வென உச்சரியாது **சிவாயநம**வென உச்சரித்தல் வேண்டும். அவ்வாறு உச்சரிக்க, அருளாகிய **வகாரம்** ஆன்மாவுக்குக் களைகணுன **சிகாரத்தில்** சேர்த்து இன்பக் கடலில் அழுத்துவிக்கும். ஈண்டு உச்சரிக்க என்றது உள்ளத்தில் உன்னுதலைச் செப்பியதாகும். மந்திரங்களை உச்சரித்தல் மானதம், மந்தம், உரையென மூவகைப்படும். அவற்றுள் **மானதமாவது**

மனத்தால் தியானித்தல். அதாவது உள்ளத்துன்னுதல். **மந்தமாவது** சூக்கும வைகரி வாக்கால் தன் செவிக்கு மட்டுங் கேட்கும்படி உச்சரித்தல். **உரையாவது** ஸ்தூல வைகரி வாக்கால் தனக்கும் பிறருக்கும் கேட்கும் படி யுச்சரித்தல். இம்மூன்றனுள் சுத்தமானதாகிய அறிவாற் கணித்தலே சாலச்சிறப்புடைத்தாம். பலனும் ஒன்றுக் கொன்று ஆயிரமாயிரமாகவும் லட்சம் லட்சமாகவும் அதிக மாகும். இத்தகைச் சிறப்பு வாய்ந்த ஓசைதரும் அஞ்செழுத் தாகிய சூக்கும பஞ்சாட்சரத்தை ஆசாரியன் உபதேசித்த விதிப்படியே நெஞ்சிலழுத்தி யுச்சரித்து, சனன மரணங்கட்கு உட்படுத்தும் நகாரமகாரங்களாகிய ஊன நடனத்தை அறவே கைவிட்டு, சிகார வகாரங்களாகிய ஞான நடனத்தைப் பொருந்தி, வகாரமாகிய அருட்பெருவெளி மேலிட மேலிட உள்ளத்துன்னுதலாகிய உச்சரிப்பையும் விட்டு, அதில் நிறைந்து, சீவபோதமற்று, அதுதானாய் நிற்கவே அவ்வருள் சிகாரமாகிய ஞேயத்திலழுத்திக் கேவலம் **அறிவாகாரமாய்** நிற் கும் வண்ணஞ் செய்யும். அதுவே **பரமுத்தி** என்னும் அத் வைதானந்த முத்தியாம். அதனையே நம் **மணிவாசகப் பெருமான்,**

கோயின் முத்த திருப்பதிகம்

" உடையாளுன்றன் நடுவிருக்கும்
உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும்
இருப்பதானல்" எனவும்

" முன்னின்று ஆண்டா யெனைமுன்னம்
யானுமதுவே முயல்வுற்றுப்
பின்னின் றேவல் செய்கின்றேன்
பிற்பட்டொழிந்தேன் பெம்மானே "

எனவும் வரும் திருப்பாசுரங்களில் நன்கு விளக்கியுள்ளார். இதன் விரிவை எமது **திருவாசகக் குறிப்புரையினும் விஷய சூசனத் தினுங் காண்க.** இவ்வனுபவ ரகசியங்களை யெல்லாம் குருபரன் திருத்தாளைச் சேர்ந்து, அவனை முறையோடு வழிபட்டு, அவ னது உபதேச வாயிலாக **ஓது முறையில் ஓதி, உணரும் முறையில்**

உணர்ந்து, நிற்கும் முறையில் நின்று அறிந்துகொள்ளல் வேண்டும். அன்றியும், இப் பஞ்சாட்சரம் ஏகாட்சரமாக மாறும். வகாரத்தில் நகாரமும், யகாரத்தில் மகாரமும், சிகாரத்தில் வகாரமும் அதில் யகாரமும் ஒடுங்குமுறை அவனே யுபதேசிக்கற்பாலன். சிற்றறிவினராகிய நாமோ சிகாரத்தை முதலாக ஓதுமுறையொன்றையே கவனித்து ஞானகுருவை யடைதற் குரியவராகின்றோம். இவ்வுண்மையைக் கடைப்பிடிக்க. சிகாரத்தை முதலாக உச்சரிப்பதற்குச் சில பிரமாணங்கள் வருமாறு:—

உண்மை விளக்கம்

நம்முதலா ஓதிலருள் நாடாது நாடுமருள்
சிம்முதலா ஓதுநீ சென்று.

ஆதி மலமிரண்டும் ஆதியாய் ஓதிலைல்
சேதியா மும்மலமுந் தீர்வாகா.

திருவருட் பயன்

மாலார் திரோத மலமுதலாய் மாறுமோ
மேலாகி மீளா விடின்.

சிவமுதலே ஆமாறு சேருமேல் தீரும்
பவமிதுநீ ஓதும் படி.

தைத்திரீய நாராயணீயம்

சிவாய நம: சிவலிங்காய நம:

திருநாவுக்கரசுமூர்த்திகள் தேவாரம்

திருவாய்ப் பொலியச் **சிவாய நம**வென்று நீறணிந்தேன்
தருவாய் சிவகதிநீ பாதிரிப்புலியூ ரரனே.

அல்ல லாகஐம் பூதங்க ளாட்டினும்
வல்ல வாறு **சிவாய நம** வென்று
நல்ல மேவிய நாதனடி தொழ
வெல்ல வந்த வினைப்பகை வீடுமே.

திருவாசகம்

நானேயோ தவஞ்செய்தேன்
சிவாய நம வெனப் பெற்றேன்.

திருமந்திரம்

தெள்ளமு தூறச் **சிவாய நம**வென்று
உள்ளமு தூற ஒருகா லுரைத்திடும்.

சிவாய நமவெனச் சித்த மொருக்கி
அவாய மறவே அடிமைய தாக்கி.

செம்பு பொன்னகுஞ் **சிவாய நம**வென்னில்
செம்பு பொன்னகத் திரண்டது சிற்பரம்.

வாறே **சிவாய நமச்சிவா யநம**
வாறே செபிக்கில் வரும்பேர் பிறப்பில்லை.

பெரிய புராணம்

குருகாவூர் அமர்ந்தருளும் குழகர்வழி பார்த்திருப்பத்
திருவாரூர்த் தம்பிரான் தோழர்திருத் தொண்டருடன்
வருவாரப் பந்தரிடைப் புகுந்துதிரு மறையவர்பால்
பெருகார்வஞ் செலவிருந்தார் **சிவாயநம** வெனப்பேசி.

ஔவைப் பிராட்டியார்

சிவாய நமவென்று சிந்தித் திருப்போர்க்(கு)
அபாயம் ஒருநாளும் இல்லை...

மேலே காட்டிய பிரமாணங்களால் எல்லாக் கடவுளருந் தாமாகவிருக்கும் சச்சிதானந்தமே சொரூபமாகவுடைய சிவ பரம்பொருள் சூக்கும பஞ்சாட்சரத்தில் முதற்கண் வைக்கப் பட்டது. துக்க சொரூபமான பாசத்தை நீக்கி ஆனந்த சொரூபமான சிவத்தையடைய உரித்தாயுள்ள பசு பாசத்துக்கு மேலே சிவத்தோடு சேரவைக்கப்பட்டது. அசத்தாயுள்ள பாசம் இறுதியில் வைக்கப்பட்டது. இம்முறை **பதி, பசு, பாசம்** என்னும் பிரயோகத்தாலும் நன்கறியலாம். இம்முறை தவறி

வழங்கும் **சித்து, அசித்து, ஈசுவரன்; ஜக ஜீவ பரம்** என்ற தொடர் மொழி வாக்கியங்களின் உட்கிடை நம்மவரால் ஊகித்தறியக் கிடக்கின்றது.

ஸ்ரீ ஆனந்த நடராசரது திருவுருவம் பஞ்சாட்சரத்தால் அமைந்தது

சிதாகாச ரகசியத்தை வெளிப்படுத்தும் திருச்சிற்றம்பல மென்னும் அதீதநிலையாய உன்மனு கலைக்கண்ணே பரையின் வடிவாய் விளங்கும் ஞானகாசமாகிய சிதம்பரத்திலே ஞான மன்றாகிய சிற்சபையிலே திருவருளே திருமேனியாகச் சகளீ கரித்து ஆனந்த நிருத்தனஞ் செய்யும் **மெய்ப்பொருள்** ஞானானந்த வஸ்துவாகிய சொரூப சிவமே. அதுதான் அகண்டாகார மயம். அதுவே தன்னில் எழுந்து பொதுவில் நடனஞ் செய்தது. அப்பொருள் செய்யுந் தாண்டவ கோலத்துக்கே ஆனந்த நடராச மூர்த்தியென்று பெயர். அத் தாண்டவத்துக்கு என் றும் முடிவின்மையால் அநவரத தாண்டவமென்று வேதம் புகலும். அம்மூர்த்தி சுத்த மாயாகாரிய ஈசுவர தத்துவ நிலைய ராகிய **மகேசுவரமூர்த்தி** கொள்ளும் வடிவங்களுளொன்றாய நடராசமூர்த்தியும் அல்லர்; குண தத்துவ நிலையராகிய **ஸ்ரீ கண்ட ருத்ரர்** கொள்ளும் வடிவங்களுளொன்றாய நடராசமூர்த்தியும் அல்லர். ஆனல் அவ்விரு மூர்த்திகளுக்கும் அப்பாற்பட்ட **சம்பு பட்சத்து அதிதெய்வ**மாகிய ஸ்ரீ நடராசமூர்த்தியாதலால் அவர் நிருத்தனஞ் செய்யும் ஆகாசமும் சுத்தமாயை, அசுத்தமாயை, பிரகிருதிமாயை என்னும் மூன்று மாயைக்குட்பட்ட எந்த ஆகாசமுமன்று. பராசத்தி வடிவாய சிற்பர வியோமமென் னும் **சிதம்பர**மாம். அதனை நம் அருண்மொழித் தேவராகிய ஸ்ரீ சேக்கிழார் சுவாமிகள் அடியில் வருமாறு துதித்துள்ளார்:

கற்பனை கடந்த சோதி கருணையே உருவ மாகி
அற்புதக் கோல நீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோம மாகுந் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடஞ்செய் கின்ற பூங்கழல் போற்றி போற்றி.

—**தில்லைவாழந்தணர் புராணம்**

தைத்திரீயோபநிஷத்தும் ஆனந்தவல்லியில்

'ஸத்யம் ஜ்ஞான மனந்தம் பிரஹ்ம
யோவேத நிஹிதம் குஹாயாம் **பரமேவ்யோமந்**'

என்று புகன்றது.

இந்த ஆனந்த நடராசமூர்த்தியின் சிற்கனத்திருமேனி திருவைந்தெழுத்தாகிய ஸ்ரீ பஞ்சாட்சரத்தால் அமைந்தது. ஏனைய நடராசமூர்த்திகளுடைய வடிவங்களோ பஞ்சப்ரஹ்ம ஷடங்கமந்திரங்களால் பாவிக்கப்படுகின்றவை. ஆதலால் இம் மகேசுவர ருத்திர நடராச மூர்த்திகளுக்கும், ஸ்ரீ சிற்சபேச நடராசமூர்த்திக்கும் பேதம் பெரிது. இவ்வுண்மை எல்லாருக்கும் விளங்குவதருமை. எல்லாச்சமய உண்மைகளையும் தன்னுள் அடக்கிக்கொண்டு தான் அவற்றினுளொன்றினு மடங்காது ஞானப் பிழம்பாயொளிரும் **சிவஞானபோத** உண்மை நூலின் உண்மைக் கருத்துணர்ந்த உண்மை வைதிக சைவர்களுக்கே புலனும். கடைப்பிடிக்க.

இந்நடராச மூர்த்தியினது திருவுருவில் **நகாரம்** திருவடியாகவும், **மகாரம்** திருவுந்தியாகவும், **சிகாரம்** திருத்தோளாகவும், **வகாரம்** திருமுகமாகவும், **யகாரம்** திருமுடியாகவும் விளங்கும். இன்னும் தமருகம் (உடுக்கை) ஏந்திய கரம் **சிகார**மாகவும், வீசியகரம் **வகார**மாகவும், அபயகரம் **யகார**மாகவும், அக்கினியேந்திய கரம் **நகார**மாகவும், முயலகனை மிதித்த பாதம் **மகார**மாகவும் ஒளிரும். மேலும் தமருகம் ஏந்திய திருக்கரம் சிருட்டியையும், அபயகரம் ஆத்மரட்சையையும், அக்கினியேந்திய திருக்கரம் மலசங்காரத்தையும், ஊன்றிய பாதம் பிரபஞ்சத்தை மறைக்குந் திரோதானத்தையும், தூக்கி மடித்தாடும் குஞ்சிதபாதம் அநுக்கிரக முக்தியையும் தெரிக்கும். திருவடியைத் தூக்கியதுமட்டும் போதாதோ, அதை மடிக்கவும் வேண்டுமோவெனின்: **தூக்கியது** - ஆன்மாவினிடத்து அருளை மேலிடச் செய்தல்; **மடித்தது** - அருளானந்தத்தை அவ்வான்மாவினிடத்து நிலைபெறச் செய்தலாம். அன்றியும், தமருகத்தை உதறியடித்தல் மாயை யுதறுதலென்றும், அம்மாயை

யிற் கட்டுண்டு கிடந்த சஞ்சித கர்மங்களை எரித்தல் அக்கினியின் தொழிலென்றும், மலத்தை மேலிடாது அமுத்துதல் ஊன்றிய திருவடியின் தொழிலென்றும், ஆன்மாவினிடத்தில் அருட்பூரண மேலிடும்படி செய்து அப்பூரண நிறைவே தானாக நிற்க வைத்தல் தூக்கிய திருவடியின் தொழிலென்றும், மதுவுண்ட வண்டைப்போல் ஆனந்தவாரிதியிலழுத்துவித்தல் அபயகரத் தொழிலென்றுங் காட்டும். இத்திறத்திரு நடனமே திருவம்பலத்தின் கண்ணிகழும் திருக்கூத்தின் முறைமையாம். இது முத்தர்கள் ஆனந்தத்தை யநுபவிக்கும்பொருட்டுச் செய்யும் ஐந்து தொழிலாதலின், இதனின் வேறாயுள்ளது பெத்தத்தில் கர்மத்தையூட்டுவிக்குந் தொழில். இத்தொழிலுக்குத்தான் பெரும்பான்மையும் பஞ்ச கிருத்தியத் தாண்டவமென்று பெயர். இஃது ஒரு காலத்து நடப்பதும் ஒரு காலத்தொழிவதுமாயிருக்கும். முன் சொன்னதோ, ஆனந்தத் தாண்டவமும், அநவரத தாண்டவமுமாம். அதுவே ஆதியும் முடிவுமில்லாத அற்புதத் தனிக்கூத்து. மேற்சொன்னவற்றின் உண்மைகளை அடியிற் காட்டும் பிரமாணங்களால் தெளிக.

உண்மை விளக்கம்

ஆடும் படிகேள்நல் அம்பலத்தான் ஐயனே !
நாடுந் திருவடியி லேநகரம்—கூடும்
மகரம் உதரம் வளர்தோள் சிகரம்
பகருமுகம் வாமுடியப் பார்.

சேர்க்குந் துடிசிகரம் சிக்கனவா வீசுகரம்
ஆர்க்கும் யகரம் அபயகரம்—பார்க்கிலிறைக்(கு)
அங்கி நகரம் அடிக்கீழ் முயலகனார்
தங்கும் மகரமது தான்.

தோற்றந் துடியதனில் தோயும் திதியமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்—ஊற்றமா
ஊன்று மலர்ப்பதத்தில் உற்றதிரோ தம்முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு.

மாயை தனையுதறி வல்வினையைச் சுட்டுமலம்
சாய வமுக்கியருள் தானெடுத்து—நேயத்தால்
ஆனந்த வாரிதியில் ஆன்மாவைத் தானமுத்தல்
தானெந்தை யார்பாதந் தான்.

எட்டு மிரண்டும் உருவான லிங்கத்தே
நட்டம் புதல்வா நவிலக்கேள் — சிட்டன்
சிவாய நமவென்னுந் திருவெழுத்தஞ் சாலே
அவாயமற நின்றாடு வான்.

ஸ்ரீ நடராசமூர்த்தியின் ஆனந்த நடனத்தைத் தரிசித்தற்குரியார் இவரெனல்

எவ்வித இடையூறுமில்லாத தனியிடத்திலே சுகாசனத்திருந்து பரிசுத்தனுகிக் கழுத்து, தலை, சரீரம் ஆகிய இவற்றைச் சமமாக நிறுத்தி, அன்பினோடு தனது குருவை வணங்கி, இந்திரியங்களை யடக்கி, முக்குணவசத்திற்படாது, பிராணுயாமத்தினுலே இடைகலைபிங்கலைகளை யடைத்துப் பிராணனைக் கும்பித்துச் சுழுமுனை நாடியிலே பிரவேசிக்கும்படி செய்து, ஆறுதாரங்களையுங் கடந்து அப்பாற்சென்று, ப்ரஹ்மரந்தரத்தின் மேலுள்ள சமனுகலையையுந் தாண்டி உன்மனுகலையின் கண்ணுள்ள எமது அப்பனுகிய ஸ்ரீ நடராஜமூர்த்தியைத் தாண்டவச் சிலம்பொலியோடு தரிசித்துச் சென்று, அவர் அருளினுலே ஆயிரவிதழுள்ள கமலமெனப்படும் பராசத்தி நிலையத்தில் **சுத்தவறிவாய்** இலங்கும் பரம்பொருளை ஸோகம் பாவனையினுலே **அதுவே தானுகநின்று**, அத்வைதானந்தம் நுகர வல்லாரெவரோ, அவரே அந்த ஆனந்தத்தாண்டவத்தைத் தரிசிக்கவல்லவர். அம்மகான்களே பூமியிலேயே பேரின்பத்தை அநுபவித்தவர்கள். அவர்கள் பிண்டத்தில் தாண்டவ தரிசனஞ் செய்த வண்ணமே அண்டத்திலுஞ் சிற்சபையை அடைந்து ஆனந்தத் தாண்டவ தரிசனஞ் செய்தற்குரியவராகின்றனர். ஏனையோர்க்கு அது கிட்டுவதருமை ஆயினும் பரங்கருணைத் தடங்கடலாகிய எமதையன் என்போல்வார்களுமுய்யவேண்டிய நிமித்தம், இவ்வுலகினும் அந்நிலையையமைத்துப் பதஞ்சலி வியாக்கிரபாதர் பொருட்டாக ஆனந்த நிருத்

தனஞ் செய்தருளினர். அந்நிலையமைந்த விடமே இப்போது உள்ள **சிதம்பரஸ்தல சிற்சபையாம்.** இந்திரிய நிக்கிரஹஞ்செய்து, முக்குண விருத்தியுட்படாது, ஸோஹம் பாவனைசெய்து ஆனந்த நடனங்காண முடியாதார்க்கு இந்திரிய வழியே சென்று ஊனக்கண்கொண்டுந் தரிசித்து ஆனந்திக்குமாறு ஸ்ரீ நடராசமூர்த்தி அநுக்கிரகஞ் செய்துள்ளார். வாக்கு மனத்துக்கு மெட்டாத அச்**சிற்சபா நடனம்** வாக்கு மனத்துக்குமெட்டும்படி அவர் செய்தது அவரது பெருங்கருணைப் பெருக்கே. அவர் அவ்வாறு செய்தமையால் அவருடைய சொரூப லட்சணத்துக்கு ஏதும் குறைவின்று.

திருவாசகம்

"இந்திரிய வயமயங்கி இறப்பதற்கே காரணமாய்
அந்தரமே திரிந்துபோய் அருநரகில் வீழ்வேற்குச்
சிந்தைதனைத் தெளிவித்துச் சிவமாக்கி யெனையாண்ட
அந்தமிலா ஆனந்த மணிகொடில்லை கண்டேனே"

என்றற் றொடக்கத்தனவான எலும்புருக்கிப் பாசுரங்கள் கற்போன்ற என் மனத்தையுங் கசிந்துருகச் செய்யுமாயின் உள்ளன்புடைய உண்மைச் சைவர்களை எவ்விதமாக்குமோ அறியேன்! அன்பு நீர் நிறைந்த பெரிய பள்ளப்பெருக்கில் கீழ்மேலாகப் பதைத்துருகி நிற்கச் செய்யுமன்றோ!! "ஆனந்தக்கூத்தன் அருள்பெறி னுமவ்வணமே, ஆனந்த மாகிநின் றுடோமோ தோணோக்கம்" என்பது அநுபவம். ஆனந்த நடேசனைக் காணுத கண்களுங் கண்களோ! தரிசிக்காத சன்மமும் சன்மமோ!! அன்புடையீர்! தில்லைக்கு விரைந்து செல்மின்கள்; ஸ்ரீ சிற்சபேசனைத் தரிசியுங்கள்!! பயின்ற பாவத்தைப் போக்கிக்கொள்ளுங்கள்!! உளங்கசிந்து உருகுங்கள்.

அல்லாமலும், ஞானனந்த வஸ்துவாகிய சொரூபசிவம் சம்புபட்சத்து அதிதெய்வமாய்ச் சகளீகரித்து ஸ்ரீ நடராச சிற்கன கோலத்தோடு தென்முகநோக்கி மன்றில் நிற்ப, **பிரமன்** முதலிய பஞ்சகர்த்தாக்களும் அவரது சக்தியாலதிஷ்டிக்கப்பட்டு அவரது சந்நிதானத்தில் ஐந்து தொழில்களைச்

செய்வர். அந்தக் கர்த்தாக்கள் செய்யும் பஞ்சகிருத்தியங்கள் பெத்தான்மாக்களை நோக்கியதும், சிற்சபேசனுகிய எமதப்பன் செய்யும் ஐந்தொழில் நடனம் முத்தான்மாக்களை நோக்கியதுமாய் உள்ளது. ஆகையினுலே, ஸ்ரீ ஆனந்த நடராசமூர்த்தியின் திருமேனி வேத இருதயத்தில் பிரகாசிக்கும் ஸ்ரீ பஞ்சாட்சரத்தால் அமைந்ததென்றேர்க. அதுபற்றியே சிற்சபையும் நடராசமூர்த்தியும் நாயகத்தானம்பெற. ஏனைய ஆலயங்களும் அவற்றிலுள்ள மூர்த்தங்களும் பரிவாரத்தில் அமரும் விதமாய்ச் சிதம்பரவாலயம் அமைக்கப்பட்டுள்ளது. **சிற்சபை** பரமுத்தி ஸ்தானம். **கனகசபை** அபரமுத்தி ஸ்தானம். **ஏனைய சபைகள்** பதமுத்தி பந்தமுத்தி ஸ்தானங்கள். மூவகை ஆன்மாக்களும் ஸ்ரீ நடராசவள்ளலது ஆனந்தத் தாண்டவத்தைத் தரிசிக்க அசக்தரென்று விளக்கவே **சிற்சபை** துவஜஸ்தம்ப பலிபீடங்களோடு நந்திதேவரில்லாமல் விளங்குகின்றது. அதிகாரமுத்தர் அபரமுத்தர் அந்நடனத்தைப் புறம்பிலிருந்து காண்டற்கு உரியவர்களென்று தெரிவிக்கவே சிற்சபையின் வேருயுள்ள **கனகசபையில்** அதிகாரநந்தி அமைக்கப்பட்டுள்ளது. ஏனைய ஆலயங்களிலோ மூன்றும் ஒருங்கு அமைக்கப்பட்டுள்ளது பிரத்தியட்சம். இதனுலே முத்தான்மாக்களுக்கே உரியது அந்த **ஆனந்த நடனம்.** அக்கோலம் ஸ்ரீ பஞ்சாட்சரமே ஆதலின்,

> "வஞ்சக மற்றடி வாழ்த்த வந்தகூற்(று)
> அஞ்ச உதைத்தன **அஞ்செழுத் துமே**"

என்றுர் அம்பிகையின் அருட்பாலை உண்டருளி, ஞான மழை பொழிந்த சைவசிகாமணியாகிய நம் ஞானசம்பந்தப் பெருமானுர். அவரே புரமெரித்தார் திருமகனுர்.

சிதம்பராலயத்தில் **பிரமதேவர்** சண்டேசுவர ஸ்தானத்திலும், கோவிந்தராசராகிய **விஷ்ணுமூர்த்தி** கனக சபைக்குப் புறம்பிலும், **உருத்திரமூர்த்தி** காலவைரவர் வடிவத்திலும், **மகேசுவரமூர்த்தி** நிருத்த சபையிலும், **சதாசிவமூர்த்தி** திருமூல ஸ்தானத்திலும் விளங்கியிருத்தல் பிரத்தியட்சம். ஏனைய ஆலயங்களில் இவ்விதவமைப்பின்று. **அருட்பராசக்தியே சிவகாமியம்மை** என்றேர்க.

ஸ்ரீ சிதம்பரம் தரிசிக்க முக்தியாம்

அல்லதூஉம், எல்லாக் கடவுளரும் தாமாகவிருக்கும் ஸ்ரீ ஆனந்தத்தாண்டவேச்வரப் பெருமான் தம்மையுபாசிக்கும் ஆன்மகோடிகளைப் பந்தத்தினின்றும் நீக்கி முக்தி கொடுத்துப் பரமானந்தமளிக்குஞ் செய்கை இரத குளிகையின் செயல் போன்றதாம். இரதகுளிகை **ஸ்பரிசவேதி, தரிசவேதி** எனவிருவகைப்படும். செம்பினையுருக்கி அதில் இரத குளிகையைவிட அக்குளிகை செம்போடு கலந்து ஸ்பரிசித்து வேதிப்பதுவே ஸ்பரிச வேதியாம் அப்படிக்கின்றி உருக்கிய செம்பின்முன்னே காட்டப்பட்ட தரிசனமாத்திரத்தில் வேதித்துவிடுவது தரிசவேதியாம். இவ்விருவகையுள் சிதம்பராலயத்தில் அமைந்த முக்திப்பேற்றினியல்பு தரிசவேதியின் செயல்போன்றதாம், அதுபற்றியே சிதம்பராலயம் தரிசிக்க முத்திதருமெனச் சாஸ்திரங்கள் பகராநின்றன.

திருநாவுக்கரையரும்

> "பெரும்பற்றப் புலியூரானைப் பேசாதநாளெல்லாம்
> பிறவாநாளே"

என்று உபதேசித்தருளினர்.

இத்துணை மகிமைக்குங்காரணம் ஸ்ரீ பஞ்சாட்சரமேயாம். இன்னும் விரிப்பிற்பெருகுமாதலின் இம்மட்டில் நிறுத்தினும்.

காரண பஞ்சாட்சர விளக்கம்

சிவாயசிவ என்னுங் காரண பஞ்சாட்சரம் - நகார மகாரங்களாகிய இரண்டு அட்சரங்களுமின்றி ஏனைய மூன்று அட்சரங்களுள் **யகாரம்** நடுவிலிருக்க மற்றைய **சிகார வகார**ங்களாகிய இரண்டு அட்சரங்களும் முன்னும் பின்னுமாய் நிற்க ஐந்தெழுத்தாகிச் சிகாரத்தை முதலாக வைத்து உள்ளத்துன்னுவது. இதற்கே **இருதலை மாணிக்கம்** என்றும், **இருதலைக் கொள்ளி** என்றும், **அதிசூக்கும பஞ்சாட்சரம்** என்றும் பெயர். இது சாமானியருக்கு உபதேசிக்கத் தக்கதன்று. அதிதீவிர பக்குவிக்கே உபதேசவாயிலா யுணர்த்தற்பாலது. இதுவும் முக்கிய பஞ்சாட்சரமே.

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

விண்ணி ஞர்பணிந் தேத்த வியப்புறு
மண்ணி ஞர்மற வாது **சிவாய**வென்(று)
எண்ணி ஞர்க்கிட மாவெழின் வானகம்
பண்ணி ஞரவர் பாலைத் துறையரே.

திருமந்திரம்

சிவாய சிவசிவ என்றென்றே சிந்தை
அவாயங் கெடநிற்க ஆனந்த மாமே.

ஆனந்த மூன்றும் அறிவிரண்(டு) ஒன்ருகும்
ஆனந்த **சிவாய** அறிவார் பலரில்லை.

ஆரு(று) அகன்று நமவிட்(டு) அறிவாகி
வேருன தானே யகாரமாய் மிக்கோங்கி
ஈருர் பரையின் இருளற்ற தற்பரன்
பேருர் **சிவாய** அடங்கும்பின் முத்தியே.

மகாகாரண பஞ்சாட்சர விளக்கம்

சிவ என்னும் மகாகாரண பஞ்சாட்சரம் - மேற்சொன்ன காரண பஞ்சாட்சரமாகிய சிகார வகார யகாரங்களுள்ளே **யகாரமாகிய ஆன்மா** மும்மலங்களினின்றும் நீங்கிப் பரையின் வியாபகத்திற் றலைப்பட்டு, அதனெடு அநந்நியமாய் வகார சிகாரங்களின் இடையே நின்று, அட்சரம் உன்னுதலையும் விட்டு, அப்பரையின் சொரூபமே எங்குமாய்க் காணப்பெற்றுச் சிவமும் அருளுமாய் நிற்றலாம். இது தமிழ் மறையில் **வாசி** என முதல் நீண்டும், ஆரியவேதத்தில் **வஸீ** என இறுதி நீண்டும் விளங்குவதாம். பின்னர், வர்ன வ்யத்தியயத்தினுல் அதாவது எழுத்துக்கள் மாறுதலினுல், **சிவ** என விளக்கமுற்றுச் சிவ:, சிவை, சிவம் என முப்பாற் பொருளும்பெற்று அதீதப் பொருளாய், பரப்ரஹ்ம சொரூபமாய் வேதசிரசில் மிளிரும். இதுவும் முத்தி பஞ்சாட்சரமே. இதன் மஹிமையும் மிக்க ரகசியமாதலின் குருமுகத்தால் அறிந்து கொள்க.

திருமந்திரம்

எழுத்தறி வோமென் றுரைப்பர்கள் ஏதர்
*எழுத்தை அழுத்தும் எழுத்தறி யாரே.

திருவருப்பயன்

வாசி யருளி யவ்வை வாழ்விக்கும் அற்றதுவே
ஆசில் உருவமுமாம் அங்கு.

ஆசில் நவாநாப்பண் அடையா(து) அருளினுல்
வாசியிடை நிற்கை வழக்கு.

மஹாமனு விளக்கம்

சி என்னும் மஹாமநுவாகிய முத்தி பஞ்சாட்சரம் - மகா காரண பஞ்சாட்சரத்திலுள்ள சிகார வகாரங்கள் இரண்டனுள் வகாரமாகிய அருளில் நிறைந்து நின்ற ஆன்மாவை அருளொடுந் தன்னுள் லயப்படுத்திக்கொண்டு கரைகடந்த பேரானந்தப் பெருவெள்ளத்தில் அழுத்தி ஏகசொரூபமாய் நிற்கும். அப்பொழுது ஆன்மா நீ நான் என்றிரண்டின்றி அறிவுருவாய் எங்கும் நிறைந்து நிற்பதுவே இம்மநுவின் மகாரகசியம். இதுவே எல்லாரும் ஈடேறும் பொருட்டும், குணங்குறி யற்று இன்ப நிட்டை கூடுதற்கும் எம்மான் கைகாட்டிய கருத்து; பரிபூரண நிலேயும் இதுவேயாம். இது சிவஞானிகளாலேயே அநுபவ வாயிலாய் உணரப்படுவது. "அறிவு வடிவென் றறிந் திருந்தேனே" என்றுர் திருமூலர். இம்மஹா மநுவுக்கே இறையெழுத்தெனவும், பெருவெழுத்தெனவும், பேசாவெழுத்தெனவும், ப்ரஹ்ம பீஜமெனவும் பெயர். இந்தச் சி என்னும் எழுத்தில் ச் (சகார மெய்) - வரிவடிவு; அ - பிரணவாட்சர மூலம்; இ - அவ்வட்சர மூலத்தை விளக்கும் அருட்பூரணம்; இம்மூன்றின் தோற்றமும் அசைவும் - விந்து; இதன் புடைபெயர்ச்சியாகிய ஒலியே - நாதம். இவ்வைந்தும் ஒன்றுயமைந்ததே சி. இதன் விளக்கம் மெய்ஞ்ஞானிகளுக்கே புலப்படுவதாம்.

---

*தலையெழுத்தை

திருவாசகம்

"சிவனென யானுந் தேறினன் காண்க"

"நாமொழிந்து
சிவமான வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ".

திருமந்திரம்

சீவன் எனச்சிவன் என்னவே(று) இல்லை
சீவ னார்சிவ னாரைய றிகிலர்
சீவ னார்சிவ னாரைய றிந்தபின்
சீவ னார்சிவ னாயிட்டி ருப்பரே.

நானென்றுந் தானென்றும் நாடினேன் நாடலும்
நானென்றுந் தானென் றிரண்டில்லை யென்பதும்
நானென்ற ஞானம் முதல்வனே நல்கினன்
நானென்று நானும் நினைப்பொழிந் தேனே.

நானென்றுந் தானென்றும் நாடிநான் சாரவே
தானென்று நானென் றிரண்டிலாத் தற்பதம்
தானென்று நானென்ற தத்துவ நல்கலாற்
தானென்று நானென்றுஞ் சாற்றகி லேனே.

நானென நீயென வேறில்லை.

நானென்(று) அவனென்கை நல்லதொன் றன்றே.

திருக்களிற்றுப்படியார்

சிவமே சிவமாக யானினைந்தாற் போலச்
சிவமாகி யேயிருப்ப தன்றிச்—சிவமென்(று)
உணர்வாரு(ம்) அங்கே உணர்வழியச் சென்று
புணர்வாரும் உண்டோ புவி.

அதுவிது வென்றும் அவன்நானே யென்றும்
அதுநீயே யாகின்றாய் என்றும்—அதுவானேன்
என்றுந் தமையுணர்ந்தா ரெல்லாம் இரண்டாக
ஒன்றாகச் சொல்வாரோ உற்று.

தாயுமானசுவாமிகள் பாடல்

நீயென நானென வேறில்லை யென்னும் நினைவருளத்
தாயென மோன குருவாகி வந்து.

யான்றான் எனலறலே இன்பநிட்டை யென்றருணைக்
கோன்றான் உரைத்தமொழி கொள்ளாயோ.

எங்குஞ் சிவமே **இரண்டற்று** நிற்கின்நெஞ்சே !
தங்குஞ் சுகநீ சலியாதே.

நீயற்ற அந்நிலையே நிட்டை.

நானெனவும் நீயெனவும் இருதன்மை நாடாமல் நடுவே
தானமரும் நிலையிதுவே சத்தியம் சத்தியம். [சும்மா.

என்னையுந் தன்னையும் வேறு—உள்ளத்.
தெண்ணாத வண்ணம் இரண்டற நிற்க.

உனக்(கு) ஆனந்தம் வேண்டின் **அறிவாகிச்** சற்றே
நின்றால் தெரியு மெனவே.

தானான தன்மயமே அல்லாலொன்றைத் தலையெடுக்க
வொட்டாது.

அதுவெனலும் அறவேவிட்டு, **மதுவுண்ட வண்டு** எனவுஞ் சநகனாதி மன்னவர்கள் சுகர் முதலோர் வாழ்ந்தார் என்றும், பதியிந்த நிலை.

ஆராலும் அறியாத சத்தன்றே **அது**வாய்,
அங்கிருநீ யெங்கிருந்தும் **அது**வாவை கண்டாய்.

கந்தரநுபூதி

யானாகிய வென்னை விழுங்கி வெறுந்
தானாகி நின்றது தற்பரமே.

இன்னும் அனேக பிரமாணங்கள் உள. விரிவஞ்சி விடுத்தாம். இதுவரையிலும் கூறிப்போந்த ஐவகைப் பஞ்சாட்சரங்களுள் வைதிக சைவர்களாகிய நாம் நியமமாக உச்சரிக்கவேண்டிய மந்திரங்கள் இரண்டே. அவை **ஸ்தூலமும், சூக்குமமு**மாம்

மந்திரங்களின் மகத்வ விளக்கம்

மேற்சொன்ன நியமங்களை விட்டுச் சிலர் 'செய்யவேண்டியது இது, தவிர்க்கவேண்டியது இது' என்றுணராமலும், **மந்திரப் பொருத்தம்** ஆவசியகமென்பதை அறியாமலும், பலர் இடத்திலும் பலவாறு உபதேசிக்கப்பெற்றும், சாஸ்திரங்களில் எழுதி வைத்திருக்கும் மந்திரங்களைக் குருமுகத்தாற் பெருமல் தாமே உச்சரித்தும் நிஷ்பலமடைந்து அனேக தீமைகளுக்கு ஆளாகி நிர்ப்பாக்கிய நிலையடைகின்ருர்கள். அப்படிச் செய்வது பெருங் குற்றமென்று ஈண்டெடுத்துக் காட்டினும். **சித்தர்களோ** தங்களுக்குப் பொருத்தங் குறைவாயுள்ள மந்திரங்களையுங்கூடத் தங்களுக்குப் பொருந்துமாறு அட்சரங்களை மந்திரார்த்த நியாயங்கொண்டு முன்பின்னுக மாற்றிக் கணித்து, வேண்டிய சித்திகளைப் பெற்றுக்கொள்ளுகிருர்கள். அப்படிச செய்யவோ நம்மவர்களுக்குச் சாத்தியமின்று. ஆதலால் **ஓசைதரும் ஐந்தெழுத்தையே** குருமுகமாயறிந்து விதிப்படி உள்ளத்துன்ன, எல்லாப் பலன்களும் சித்தியாகும். மந்திரத்தால் யானை முதலிய மிருகங்களும் சர்ப்ப முதலிய விஷ ஜந்துக்களும் கட்டுப்படுதல் பலருமறிந்த விஷயம், ஒருவர் ஒரு தேவதையையோ அல்லது ஓர் மஹானையோ தியானித்த மாத்திரத்தில் அந்தத் தேவதை அல்லது அந்த மஹான் அவருக்கு எதிர்ப்பட்டதாகவும், ஓர் அஸ்திரத்தைச் சங்கற்பித்த மாத்திரத்தில் அவ்வஸ்திரம் அவரிடம் வந்ததாகவும் புராண இதிகாசங்களிற் கூறப்பட்டிருத்தல் பிரசித்தம். இதனுல் மந்திரத்தால் ஆகாத காரியம் ஒன்றுமின்றென்று தெரியவருகின்றது. ஆயினும், மந்திரங்களை எப்பொழுதும் குருமுகத்தாற் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றே ஈண்டு நாம் வற்புறுத்துகிருேம். பீஜாட்சரங்களை மந்திரங்களோடு சேர்த்துக் கிரமமாய்ச் செபிக்கின், வேண்டிய இஷ்ட சித்திகள் கிடைப்பதாயினும், மந்திர தேவதைகளுக்கு விருப்பமில்லாத காரியங்களைச் செய்யின் அத்தேவதைகள் உடனே அவனுக்கு அனேக தீங்குகளைச் செய்து அவனை நிர்ப்பாக்கியனுக்கிவிடும். ஆதலால் மந்திரங்களைத் தம்மிஷ்டப்படி செபித்தல் கூடாது. மனமும் நிர்மலமா யிருத்தல் வேண்டும். பரோபகார சிந்தையும் மிக்க

ஆவசியகம். சிவபெருமானுக்குச் செய்யும் பலவித ஆராதனை களுள் **பரோபகாரமும், நமஸ்காரமுமே** சிறந்த ஆராதனங்களாம் இப் பரோபகாரத்தைக் கைவிட்டால் மந்திரங்கள் சிறந்த பலனைத் தாரா.

திருக்குறள்

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்

தொல்காப்பியம்

நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திர மென்ப

எனவும் போந்த ஆணைகளைக் கூர்ந்து யோசித்து மந்திரங் களின் ஆற்றலைத் தெரிந்துகொள்க. சாதாரணமாய் வீட்டு வாசற்படியின் தலைப்பில் "**உள்ளே வரக்கூடாது**" என்று எழுதி வைத்திருந்தால் அவ்வாக்கியத்தைக் கண்டமாத்திரத்தில் உள்ளே செல்ல அஞ்சி வெளியில் நின்றுவிடுவது யாவருமறிந்த விஷயம். சாதாரணமான எழுத்துக்களுக்கே இத்தகைய வல் லமை இருக்குமாயின் சிவ சக்தி தோய்ந்த மந்திரங்களின் ஆற் றலைக் கூறவும் வேண்டுமோ! மந்திரங்கள் யாவும் சடமா யிருந்தாலும் ஆன்மாக்களின் நன்மையைக் கருதியே பிரதம சிருட்டியில் அவையாவும் நாதரூபமாய் உண்டாக்கப்பட்டன. ஆனமையின் அட்சர சமூகமாகிய மந்திரங்களை அட்சர ஸ்வரூபிணியாகிய அருட்சத்தி தோய்ந்து நின்று ஆன்மாக் களைக் காக்கின்றது. அஃது எதுபோலுமெனின், அக்கினியை உற்பத்திசெய்யும் அரணியென்னுங் கட்டைமீது, உத்தராரணி யென்னும் ஊன்றிக் கடையுங் கட்டையை வைத்து இடை விடாது கடையின் அவ்விரண்டினுள்ளும் மறைந்து நிற்கும். அக்கினி வெளிப்படுவதுபோல ஆன்மாவை [1] அரணியாகவும், மந்திரத்தை [2] உத்தராரணியாகவும் வைத்துத் **தியானம்** என்ற கடைதலை இடையறாது செய்யின் அம்மந்திரத்துக்குரிய தேவதை வெளிப்பட்டு ஆன்மாவைக் காப்பதோடு அவன்

1. அரணி-தீக்கடை கட்டை 2 உத்தராரணி-தீக்கடைகோல்.

விரும்பிய பலன்களையெல்லாந் தரும். ஆதலால் மந்திரத்தைச் சாதாரணமான சொல்லென்று கருதவேண்டாம். இன்னுங் கூறவேண்டிய விஷயங்கள் அனேகமுள. விரிவஞ்சி விடுத்தாம்.

ஸோஹம் பாவனை விளக்கம்

இந்நூலின் 64-ஆம் பக்கத்தில் **ஸோஹம்** பாவனை கூறப் பட்டுள்ளது. ஸோஹம் என்னும் மொழி, **ஸ: + அஹம்** என்னும் இரண்டு சொற்களால் ஆக்கப்பட்ட ஒரு தொடர்மொழி. இதில் பிரணவம் பின்னிக் கிடக்கின்றது. இதன் பொருள் **அவன் நான்** என்பதே. அதாவது, ப்ரஹ்மம் நான் என்பதாம். **ப்ரஹ்மம் நான்** என்றாலும், **நான் ப்ரஹ்மம்** என்றாலும் இரண்டும் ஒன்றேயென்று அசுரவேதாந்தங் கற்றோர் கூறுவர். அது பொருத்தமின்றென்பதைச் சிவஞானிகள் வாக்குகளால் தெளிவிப்பாம்.

திருவாசகம்

நவமாய செஞ்சுடர் நல்குதலும் **நாமொ**ழிந்து
சிவமான வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ.

திருமந்திரம்

நானு மழிந்தமை நானறி யேனே.
நாமய மற்றது நாமறி யோமே.

திருவுந்தியார்

நாமற்ற பின்னைதன், தன்செயல் தானேயென் றுந்தீபற
தன்னையே தந்தான் என் றுந்தீபற.

நெஞ்சுவிடு தூது

தாம்பிரமங் கண்டவர்போல் தம்மைக்கண் டாங்கதுவே
நாம்பிரம்ம் என்பவர்பால் நண்ணாதே.

தாயுமான சுவாமிகள்

நாம்பிரம மென்றால் நடுவேயொன் றுண்டாமால்
தேம்பியெல்லாம் ஒன்றாய்த் திகழுநாள் எந்நாளோ.

நானென தன்மை நழுவியே எவ்வுயிர்க்கும்
தானான உண்மைதனைச் சாருநாள் எந்நாளோ.

ஊனின்றி நாதன் உணர்த்துமதை விட்டறிவேன்
நானென்ற பாவிதலை நாணுநாள் எந்நாளோ,

சொல்லுக் கடங்காச் சுகப்பொருளை **நாமெ**னவே
அல்லும் பகலும் அரற்றுவதென்—நல்லசிவ
ஞானமயம் பெற்றோர்கள் **நாமி**ல்லை என்பரந்தோ
மோனமய மான முறை.

நான்றன் எனுமயக்கம் நண்ணுங்கால் என்னுணை
வான்றானென நிறைய மாட்டாய்நீ.

நானென நிற்குஞானம் ஞானமன் றந்தஞானம்
மோனமா யிருக்க வொட்டா.

யாங்களே கடவுளென் றிடும் பாதகத்தவரும்
நட்டநடு வேயிருந்த **நாமென்**பர் சிலர்.

ஞானத் தெய்வத்தை நாடுவன் **நானெ**னும்
ஈனப் பாழ்கெட என்றும் இருப்பனே.

நின்னிறைவே தாரகமாய் நின்றுசுக மெய்தாமல்
என்னிறைவே பாவித்தேன் என்னே பராபரமே.

சூதசங்கிதை

கரியவனும் **யாம்பர**மென்(று) எண்ணியதற்(கு)
அளவில்பிழை கலந்த தென்றால்
உரியபிறப் பிறப்பொழியாச் சீவர்சிலர்
யாம்பரமென் றுரைப்பர் அந்தோ.

இராமலிங்க சுவாமிகள்

நாமே பிரமமெனப் பிறர்க்குரைத்துப் பொங்கிவழிந்தாங்கே
பிதற்றுகின்ற பெரியவர்தம் **பெரியமதம்** பிடியேல்.

மேலே உதகரித்த பிரமாணங்களின்படி **நான் பிரமம்** என்பது நவை வழியென்றும், **பிரமம் நான்** என்பது நல்வழி யென்றும் பெறப்படுகின்றதன்றோ?

தாயுமான சுவாமிகள்

“ உன்னைநானென்று பாவிக்கின் அத்து
விதமார்க்க முறலாம் ” என்றனர்.

“ **அஹம் ப்ரஹ்மம்** ” என்பதில் நான் என்னும் முனைப்பு முற்பட்டு நிற்றலால் அதை முன்பின் மாற்றி “ **ஸோஹம்** ” என உச்சரிக்கும்படி வைதிக சைவம் பகர்கின்றது. அம்மந்திரத்தி லுள்ள இரண்டு மெய்களை நீக்கிவிட்டால் எஞ்சுவது ஒப்பற்ற பிரணவமே. அப்பிரணவமே முமுக்ஷுக்களுடைய பூஜ்ய வாசகமாயும் விசேஷ மந்திரமாயுமுள்ளது. அம்மந்திரத்தின் ரகசியோபாசனத்தை எவனொருவன் சத்குரு கடாட்சத்தால் அறிந்து அப்பியசித்துச் சித்திபெறுவானோ அவனே பரம யோகியாவான். அவனே பிரம நிஷ்டர்களுக்குள் முக்கியமான வன். அவனுக்கே ஈசுவர சம்பந்தமான ஐசுவர்யத்தன்மையும் உண்டு. அம்மகானே,

பகவத்கீதை

ஸர்வம் ஸமாப்நோஷி ததோஸி ஸர்வ:

(இ-ள்) ‘ எல்லாவற்றையும் அடைவாய், எல்லாமும் ஆவாய் ’ என்று ஸ்ரீ கண்ணபிரான் உபதேசித்தருளியபடி பிரபஞ்ச பேதமெல்லாம் இன்பகரமாகத் தோன்ற நான் நீ என்னும் வேற்றுமையின்றிச் சர்வ சொரூபனாய்த் தானே தானாய், **அறிவாகாரமாய்** விளங்குவன். இவற்றை விரிப்பிற் பெருகும் என்றெண்ணி இவ்வளவிற் சுருக்கிப் பூர்த்திசெய்கின் றேம்.

அன்பைப் பெருக்கியென(து) ஆருயிரைக் காக்கவந்த
இன்பப் பெருக்கே இறையே பராபரமே.

இம்பீரியல் அச்சகம், திருச்சிராப்பள்ளி—56.

		ரூ.	அ.
28	கந்தர் கலிவெண்பா—மூலம் மட்டும் ...	0	1
29	நீதிநெறி விளக்கம்—ஆங்கிலமும், ஹிந்தியும் ...	0	8
30	சகலகலாவல்லி மாலை—ஆங்கிலமும், ஹிந்தியும் கூடியது	0	1
31	சிவஞான சித்தியார்—ஆங்கிலமும், ஹிந்தியும் கூடியது (அச்சில்)		
32	ஷை ஹிந்தி மட்டும்	1	0
33	திருக்குறள்—அறத்துப்பால்—ஹிந்தி மொழி பெயர்ப்பு	1	8
34	ஷை பொருட்பால் ஷை	2	8
35	ஷை காமத்துப்பால் ஷை	1	0
	ஷை மூன்று புத்தகங்களும் சேர்ந்து ...	4	0
36	திருக்குறள்—கே. எம். வேங்கடராமையா M. A., B. O. L., அவர்கள் குறிப்புரையுடன் ...	0	12
37	முதுமொழிமேல் வைப்பு—ஸ்ரீ வெள்ளி யம்பலவாணத் தம்பிரான் சுவாமிகள் ...	0	12
38	திருவுசாத்தானக் கல்வெட்டுகள்	0	6
39	திருச்செந்தூர் கந்தர் கலிவெண்பா-மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்—மதுரைக் கலம்பகம்—நீதிநெறி விளக்கம்—மதுரை மீனாட்சியம்மை இரட்டைமணி மாலை—மதுரை மீனாட்சியம்மை குறம் ...	2	12
40	திருவாரூர் நான்மணிமாலை—முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் ...	1	4
41	சிதம்பர மும்மணிக்கோவை—சிதம்பரச் செய்யுட்கோவை—தில்லைச் சிவகாமி யம்மை இரட்டைமணிமாலை	1	0
42	பண்டார மும்மணிக்கோவை—காசிக் கலம் பகம்—சகலகலாவல்லி மாலை	1	0
43	தமிழிசைப் பாக்கள்	0	8

கிடைக்குமிடங்கள் :

1 ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கலைக்கோயில், ஸ்ரீவைகுண்டம்

2 தியாகராச விலாஸ், 53 பிள்ளையார் கோவில் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5

குறிப்பு.— ஷை விற்பனைத்தொகை "குமரகுருபரன்" பத்திரிகையைச் சாரும்.

உ

"குமர குருபரன்"

[தமிழ்த் திங்கள் வெளியீடு]

ஸ்ரீவைகுண்டம்
ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் மடாலயத்திலிருந்து
விரோதி ஆண்டு தைத் திங்கள் முதல்
மாதந்தோறும் வெளிவருகிறது

★

இது
சைவசித்தாந்தம், ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தம்,
பன்னிரு திருமுறை ஆராய்ச்சி, இலக்கியம்,
பிற மொழிகள், கலாசாரம் சம்பந்தமான
கட்டுரைகள் கொண்டது

★

நிர்வாக ஆசிரியர்:

T. M. குமரகுருபரன் பிள்ளை, B.

(நிரந்தரத் தலைவர், குமரகுருபரன் சா

மானேஜிங் டிரஸ்டி, ஸ்ரீ குமரகுருபர சுவா
ஸ்ரீவைகுண்டம்

ருட சந்தா ரு. 1—8—0 தனிப்பிரதி ரு. 0—2—0

இம்பீரியல் அச்சகம், பெரியகம்மாளத்தெரு, திருச்சிராப்பள்ளி—56